விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 10 வியாழக்கிழமை (26.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 250

## ஊரடங்கை நீடிப்பதா? நாளை தீர்மானிக்கப்படும்

(கொழும்பு)
நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டத்தை 30ஆம் திகதிக்கு பின்னும் நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை தீர்மானிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குண 15

### பயங்கரவாத தடைச் சட்டத்தில்

## கைதானவர்களுக்காக ஆலோசனை சபை நியமனம்



(கொழும்பு)
பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டோர் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க ஜனாதிபதி கோட்டாவால் ஆலோசனை சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக சிறைத் தண்டனையை அனுபவிக்கும் மற்றும் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் கைது செய்யப் 15

## கர்ப்பவதியின் வயிற்றிலிருந்த 5 மாத சிசு

### கொரோனாவால் பலி

(கொழும்பு)
கொரோனா வைரஸ் 15

## தென்மராட்சியில் கோவிட் அபாயம்

### 24 மணி நேரத்தில் 4ஆவது மரணம் பதிவு

(யாழ்ப்பாணம்)
யாழ்.தென்மராட்சியில் கடந்த 24 மணித்தியாலங் 15

### கொடிய கொரோனாவால்

# பேராபத்தில் யாழ்.மாவட்டம்



### யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்

*(யாழ்ப்பாணம்)* கொடிய கொரோனா வைரஸ் தொற்றால் யாழ்.மாவட்டம் பாரிய ஆபத்தில் இருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.
நேற்று மட்டும் யாழில் கொரோனாவால் 5 பேர் உயிரிழந்ததுடன் 239 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## 8 ஆயிரத்தை நெருங்கிய கொரோனா உயிரிழப்பு

### மேலும் 198 பேர் மரணம்

(கொழும்பு)
நாட்டில் மேலும் 198 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.
குறித்த மரணங்கள் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளன.
அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற 15

## கம்பியால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் படுகொலை

### சித்தங்கேணியில் சம்பவம்



(சுப்பிரமணியன்)
யாழ்.சித்தங்கேணியில் காணித் தகராறு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் கம்பியால் 15

## கொரோனா +4,483

(கொழும்பு)
நாட்டில் நேற்று மேலும் 4,483 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் 15

## நாட்டில் தேசிய அனர்த்த நிலை ஏற்பட்டுள்ளது; தடுப்பூசியைப் பெற்று பாதுகாப்பாக இருங்கள்

### நாட்டு மக்களுக்கு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டில் தேசிய அனர்த்த நிலை ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் அனைவரும் கோவிட் தடுப்பூசியினை பெற்று பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
நாடு தேசிய அனர்த்த நிலையினை எதிர்கொண்டுள்ளது.
ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக் 15

## கொரோனாத் தொற்றால் யாழில் மேலும் 5 பேர் பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை மேலும் 5 பேர் கோவிட் - 19 நோயால் உயிரிழந்துள்ளனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று உயிரிழந்த 5 பேருக்கே கோவிட்-19 நோய்த் தொற்று உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 15

## சீனியின் விலை திடீர் அதிகரிப்பு

### ஒன்றும் செய்யமுடியாதென கையைவிரித்த அரசு

(கொழும்பு)
சீனியின் விலை திடீரென அதிகரித்த நிலையில் தம்மால் ஒன்றும் செய்ய இயலாது என அரசாங்கம் கையை விரித்துள்ளது. 15

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## கொரோனா வைரஸால் ஒரே நாளில் நால்வர் பலி

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் ஒரே நாளில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.
தண்ணீரூற்று கிழக்கைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 29 – 11 – 1972

இறப்பு 24 – 08 – 2021

## திரு. முத்துக்குமாரு மோகனகுமாரு

( மோகன் )

சுன்னாகம் தெற்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்லை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு. முத்துக்குமாரு மோகனகுமாரு நேற்று முன்தினம் (24.08.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாளையா - பொன்னமா தம்பதியரின் (சிறுப்பிட்டி) பேரனும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் விஜயரத்தினம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் மிதுலாவின் அன்புக் கணவரும் டயசாந்தியின் (கனடா) அன்புச் சகோதரனும் ஆறுமுகம், பாலசுப்பிரமணியம் (சுன்னாகம்), நடராசா (சிறுப்பிட்டி), சிவசுப்பிரமணியம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மருமகனும் தவமணி (நியூஸ்லாந்து), காலஞ்சென்ற சின்னப்பிள்ளை, சரஸ்வதி (சுன்னாகம்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.08.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(C-2582)

சுன்னாகம்.

தகவல்:- குடும்பத்தினர்

# யாழ். போதனா பரிசோதனையில் வடக்கில் 93 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 72 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 93 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 528 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின்போது குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 72 பேர், மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 27 பேர், யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 பேர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 09 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் 09 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 பேர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் 03 பேர், வெலிஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், வவுனியா மாவட்டத்தில் 13 பேர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 05 பேர், மன்னார் மாவட்டத்தில் 03 பேர், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 03 பேர், மூன்று முறிப்பு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி

## யோகேஸ்வரன் இந்திராணி



யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை, யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர் திரு. யோ.விமலன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. யோகேஸ்வரன் இந்திராணி அவர்கள் நேற்று முன்தினம் 24.08.2021 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2579)


உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்,
உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்,
உடற்கல்வி ஆசிரியர்கள், தென்மராட்சி கல்வி வலயம்

# மரண அறிவித்தல்

தேசமாண்ய, தேசபந்து, சேதகீர்த்தி

## திரு. சபாபதிப்பிள்ளை ஞானசுந்தரம்

( திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் உபதலைவர்களில் ஒருவரும் சிவபூமி அன்னதான தொண்டர் சபையின் பிரதான ஒழுங்கமைப்பாளரும் )



யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும் வெளிக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை ஞானசுந்தரம் நேற்று முன்தினம் (24.08.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ராணியின் அன்புக் கணவரும் வரதலொஜி (வவுனியா), பிறேமலொஜி (ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம் கல்வி வலயம்), பாலகாசன் (தேர்தல் ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. சிவராஜா (ஆதி மெடிக்கல் சென்ரர், ஆதி திருமண மண்டபம் - சின்னப்புதுக்குளம், வவுனியா), சுதேஸ்குமார் (நிதி உதவியாளர் - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, வடமாகாணம்), ரகிதா (ஆசிரியை - சங்கானை ஸ்தான அ.மி.த.க) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நர்த்தனன் (SLIIT ACADEMY), சிவநயனி (HNB, J.F.A- வவுனியா), வித்தகன், தத்துவன், ஹரிசாதனா, சாத்வீகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (26.08.2021) வியாழக்கிழமை யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார நடைமுறைகளுடன் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(C-2580)

Dr. சிவராஜா (மருமகன் - வவுனியா) 077 137 2137
ஞா. பாலகாசன் (மகன் - சங்கானை) 077 418 56[illegible]
சு. பிறேமலொஜி (மகள் - சங்கானை) 077 945 9310

தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 – 10 – 1951

மறைவு 25 – 08 – 2021

## சிங்கராசா கமலராசா

( எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு )

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கை வசிப்பிடமாவும் கொண்ட சிங்கராசா கமலராசா நேற்று (25.08.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் வேதநாயகியின் அன்புக் கணவரும் சோபிதாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கமலராணி மற்றும் லோகராணி (அவுஸ்திரேலியா), லோஜினி (லண்டன்), லோகிதாசன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் சாந்தகுமார், சிறி, ரோகிணி, நாகரத்தினம், சவுந்தரம், பூமலர், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் விஜயலட்சுமி, காலஞ்சென்ற ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும் இராசரத்தினத்தின் சகலனும் வனஜா, நந்தினி, சுபாஜினி, ஜெயசோதி, சுகந்தினி, ஜெயதாசன், ஜனார்த்தனன், ஜனந்தன், சாமினி, ஜெயகௌரி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (26.08.2021) வியாழக்கிழமை பிற்பகல் 6.00 மணிக்கு யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார நடைமுறைகளுடன் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(7809)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு.
புன்னாலைக்கட்டுவன்.
076 909 5516

தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் கலாசார மண்டபத்தை பாதுகாக்க அனைத்து தரப்பினரும் ஒன்றிணையுங்கள்

## யாழ். மாநகர முதல்வர் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

நாவலர் கலாசார மண்டபத்தை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்து விடாதீர்கள். அது தமிழ்மக்களுக்குச் செய்கின்ற துரோகம்.

யாழ்.மாநகரசபையில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் நாவலர் கலாசார மண்டபம் பறிபோகும் வகையில் செயற்படாதிருக்க வேண்டும் என யாழ். மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாவலர் கலாசார மண்டபத்தினைத் தமக்கு கையளிக்குமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் எமக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அவர்களுடைய கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் விதமாக இதே கோரிக்கையை வலியுறுத்தி எங்கள் சமூகத்தின் சமயப் பெரியோர்களாலும் சில கடிதங்கள் எங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோரிக்கை தொடர்பில் கடந்த மாநகரசபையின் கூட்டத்தில் நாங்கள் விவாதத்திற்கு எடுத்திருந்தோம். அந்தக் கூட்டத்தில் நாவலர் கலாசார மண்டபத்தை மீண்டும் நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு கீழ் வருகின்ற ஒரு திணைக்களத்திற்கும் கையளிக்கக்கூடாது என நான் எனது ஆணித்தரமான கரு த்தை முன்வைத்திருந்தேன்.

நாவலர் கலாசார மண்டபத்தை நாங்கள் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்தோமானால் அது எதிர்காலத்தில் எங்கள் கட்டுப்பாட்டை மீறிவேறு திணைக்களங்களுக்குச் சென்றுவிடும் அபாயம் உள்ளது.

நாவலர் கலாசார மண்டபம் யாழ்.மாநகரசபையால் சரியான வகையில் நிர்வகிக்கப்படவில்லை என்கின்றதொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. ஆனால், அந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்ற தரப்புக்களுடன் அக்கறையுள்ள ஏனையவர்களையும் இணைத்து நிர்வாகக்குழுவொன்றை நிறுவி நாவலர் கலாசார மண்டபத்தைத் திறம்பட நிர்வகிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

இதனைவிடுத்து தமிழ் மக்களின் சொத்தை மத்திய அரசின் கீழ் உள்ள ஒரு திணைக்களத்திடம் கையளிக்கின்ற நிலைப்பாட்டை ஒருகாலமும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் எடுக்கக்கூடாது என நான் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார். (4-7-18-33)

# மீண்டுமொரு மாற்றத்திற்கு தயார்

## முருத்தெட்டுவே தேரர் பகிரங்கம்

(கொழும்பு)

**நாடு முன்னேற்றமடைய வேண்டும் என்பதற்காக அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவு தோல்வியடைந்துள்ளது. எனவே புதிய மாற்றத்திற்கு தயாராகியுள்ளோம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**



அபயராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

நாட்டை பாதுகாக்கும் மக்கள் குரல் அமைப்பின் ஊடாக மீண்டும் புதிய மாற்றத்தை ஏற்படுத்த தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டைப் பாதுகாக்கும் மக்கள் குரல் அமைப்பு, ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலத்தில் உருவாக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்கு இந்த அமைப்பு பாரிய ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடு பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டிருந்தது. தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம் ஆகியவை பாரிய சவாலை எதிர்கொண்டன.

அவற்றை நிவர்த்தி செய்வதற்காக ஆட்சிக்குக் கொண்டு வந்த தற்போதைய ஆட்சியாளர்களும் எமது எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யவில்லை. ஆகவே நாட்டை பாதுகாக்கும் மக்கள் குரல் அமைப்பு ஊடாக மீண்டும் புதிய மாற்றத்தை ஏற்படுத்த தீர்மானித்துள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனா தாக்கம் தீவிரமடைந்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் அபிவிருத்திப் பணிகளை இடைநிறுத்தி நாட்டு மக்களை பாதுகாக்கும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள் என ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்கினோம்.

எமது ஆலோசனைகளை ஆட்சியாளர்கள் கவனத்திற்கொள்ளவில்லை.

ஜனாதிபதி சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை எஞ்சியுள்ள காலத்தில் நிறைவேற்ற வேண்டுமாயின் முதலில் சிறந்த ஆலோசனை சபையை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியை நெருக்கடிக்குள்ளாக்கும் தரப்பினரே அவருக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். மக்களின் வெறுப்பை அதிகரிக்கும் வகையிலேயே அரசாங்கத்தில் உள்ள ஒரு சில அமைச்சர்கள் செயற்படுகிறார்கள்.

அரசாங்கத்தின் தீர்மானங்கள் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் அமைந்து விடக்கூடாது. கொரோனா தாக்கத்துக்கான நடவடிக்கைகள் கிராமிய மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். அனைத்து கிராமங்களிலும் சுகாதார குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

அமைச்சர்கள் குறைந்தளவுக்கு கதைத்து திறம்பட செயற்பட வேண்டும். ஆளும் தரப்பில் உள்ள பெரும் பாலானோர் ஊடக பிரசாரத்துக்காக தேவையற்ற வகையில் கருத்துரைக்கிறார்கள். இவர்களின் செயற்பாடும் மக்கள் அரசாங்கத்தை வெறுப்பதற்கான ஒரு காரணியாக அமைகிறது எனவும் தெரிவித்துள்ளார். (நி-5)

# ‘சுப்பர் வேரியன்ட்’ இலங்கையிலும் பரவும் அபாயம்- ரமேஷ் பத்திரண

(கொழும்பு)

பிரித்தானிய மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கின்ற கொரோனாத் தொற்றின் சுப்பர் வேரியன்ட் என்கிற அதிவேகமாக பரவும் திரிபு, இலங்கையிலும் பரவலாம் என எச்சரிக்கப்படுகின்ற நிலையில், அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்துவது பற்றி இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

அதிதீவிரமாகப் பரவும் புதிய பிறழ்வுகள் வந்தாலும் அச்சமடையாமல், தொற்றுப் பரவாமல் தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று அரசாங்கத்தின் இணைப் பேச்சாளரான மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவையின் வாராந்த தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

உண்மையிலேயே மருத்துவத்துறை இந்த பிறழ்வுகள் பற்றி தொடர் ஆய்வுகளை நடத்தி வருகின்றது.

பிரதான விடயங்களான பாதுகாப்பு என்ற விடயத்தில் தடுப்பூசி டோஸ் இரண்டையும் பெற்றவர்கள் எவ்வகையிலான தொற்றுப் பிறழ்வுகள் ஏற்பட்டாலும் மரணம் வரை செல்வது குறைவாகும் என்பது உலக ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

இங்கும் இப்படியான தொற்றுப் பிறழ்வுகள் பல சந்தர்ப்பங்களிலும் ஏற்படலாம். இருந்தாலும் தடுப்பூசி வழங்கலின் ஊடாக நோயெதிர்ப்புச் சக்தி அதிகரிக்கின்றது.

நோயெதிர்ப்பு சக்தி உடலில் ஏற்படுவதன் ஊடாகவே இவ்வகையான தொற்றுக்களிலிருந்து உயிர்பிழைக்கின்ற நிலைமை உருவாகின்றது.

ஆகவே அனைவரும் தடுப்பூசி மீது அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தொடர்ந்தும் இந்தத் தொற்றுக்கு அச்சமடைந்து வாழ முடியாது. இந்தத் தொற்றிற்கு எதிராக செயற்பட்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்கின்ற கொள்கையில் தான் இன்றைய நாடுகள் செயற்படுகின்றன என அவர் தெரிவித்தார். (நி-4)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை 50 வீதத்தால் உயர்வு-சம்பிக்க சாடல்



(கொழும்பு)

நாட்டில் உற்பத்தி துறை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அரசாங்கம் ரில்லியன் கணக்கான நாணயத்தை அச்சிட்டுள்ளது.

இதனால் அத்தியாவசிய பொருட்களின் விலை 50 வீதத்தினால் உயர்வடைந் துள்ளது என ஐக்கிய மக் கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்தி[illegible] கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி-5)

# மயிலிட்டி வடக்கில் வெடிபொருட்கள் மீட்பு

(அராலி)




மயிலிட்டி வடக்கு. J/246 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தனியார் காணி ஒன்றில் நேற்று வெடிபொருட்கள் அவதானிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பொலி[illegible] வழங்கப்பட்டது. [illegible] வழங்கிய தகவலையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (ம-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆரம்பமானது பரா ஒலிம்பிக்




முன்னோக்கி நகர்வோம்" என்ற எண்ணக்கருவுடனான ஒட்டுமொத்த தகவலை உலகுக்கு வழங்கும் டோக்கியோ 2020 பரா ஒலிம்பிக் விளையாட்டு விழா "எங்களுக்கு சிறகுகள் உள்ளன" என்ற தொனிப்பொருளைக்கொண்ட தொடக்க விழா வைபவத்துடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு ஆரம்பமானது.

டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டரங்கில் 68, 000 வெற்று ஆசனங்களுடன் நடைபெற்ற தொடக்க விழாவின்போது பரா ஒலிம்பிக் விளையாட்டு விழாவை ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

வெள்ளை முகக்கவசத்துடன் மேடையில் பிரசன்னமான பேரரசர் நருஹிட்டோ "டோக்கியோ 2020 பரா ஒலிம்பிக் விளையாட்டு விழாவை நான் தொடக்கி வைக்கின்றேன்" என பிரகடனப்படுத்தினார்.

தொடக்க விழாவின் போது ஜப்பானின் 3 மாற்றுத்திறனாளிகள் சக்கர இருக்கையில் அமர்ந்தவாறு டோக்கியோ 2020 பரா ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தனர்.



கொரோனா தொற்று நோய் காரணமாக ஒரு வருடத்தால் பிற்போடப்பட்டு ஆரம்பமான பரா ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் 16 ஆவது அத்தியாயத்தில் அகதிகள் பரா ஒலிம்பிக் அணி உட்பட 162 அணிகளைச் சேர்ந்த 4,400 க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் 22 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

13 நாட்கள் தொடரும் பரா ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் 22 வகையான விளையாட்டுகளில் 539 தங்கப் பதக்கங்களுக்காக 4,400 க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் தத்தமது ஆற்றல்களை 21 அரங்குகளில் வெளிப்படுத்தவுள்ளனர்.

இவ் விளையாட்டு விழாவில் இலங்கையிலிருந்து 9 மாற்றுத்திறனாளிகள் பதக்கங்களை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையுடன் பங்கு பற்றுகின்றனர். (4-6)

# மேலதிக நேரக் கொடுப்பனவு கிடைக்காவிடின் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொள்ளப்படும்

## மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள்



நீண்ட நாட்களாக வழங்கப்படாத மேலதிக நேர கொடுப்பனவை விரைவில் வழங்க கோரி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள் நேற்றுகாலை முதல் அடையாள பணிப்பகிஸ்கரிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

கடந்த மாதமும் தாங்கள் போராட்டம் மேற்கொண்டிருந்த நிலையில் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படாதையும் கொரோனா காலப்பகுதியில் அர்பணிப்புடன் பணியாற்றும் தங்களுக்கு உரிய நேரத்தில் மேலதிக நேர கொடுப்பனவு கிடைக்கப் பெறவில்லை என்பதையும் சுட்டிகாட்டி நேற்றுக் காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

குறிப்பாக கடந்த வருடத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவே நீண்ட இழுபறியின் பின்னர் கிடைக்கப் பெற்றதாகவும் இவ்வருடத்தில் பல மாதங்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் எனவே விரைவில் மேலதிக நேர கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலதிக நேர கொடுப்பனவுகள் கிடைப்பதில் மேலும் தாமதம் ஏற்படும் பட்சத்தில் தொடர்ச்சியாக போராட்டங்களை மேற்கொள்வதை தவிர தங்களால் வேறு எதுவும் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (7-4-6-285)

# வவுனியாவில் 60 வயதிற்கு மேற்பட்ட 5, 500 பேர் தடுப்பூசி பெறவில்லை

(நெளுக்குளம்)

வவுனியாவில் இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் 49 பேர் கொரோனா தொற்றால் மரணமடைந்துள்ளதுடன் 3 585 பேர் கொரோனா தொற்றிற்கு இலக்காகியுள்ளதாக வவுனியா மாவட்ட பதில் அரசாங்க அதிபர் தி.திரேஸ் குமார். தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் கொவிட் சமகால நிலமை தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றையதினம் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இதன் பின்னர் இடம் பெற்ற ஊடகசந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட 5 5 00 பேர் இதுவரை கொவிட் தடுப் பூசிகளை பெற்றுக்கொள்ளவில்லை.

அவர்களிற்கு வீடு வீடாக சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடு இராணு வத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் ஊரடங்கினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான நிதி எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன்மூலம் முதற்கட்டமாக 8 ஆயிரம் குடும்பங்களிற்கு அந்த நிதியினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இருதினங்களில் அந்த கொடுப்பனவை வழங்கி முடிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

அந்த நிதியினை எமது உத்தியோகத்தர்கள் மூலம் நேரடியாகவே வீடுகளிற்கு சென்று வழங்குவார்கள்.

அத்துடன் 30 வயதிற்குட்பட்ட மேற்பட்ட 96 ஆயிரம் பேரில் 82 சதவீதமானவர்களிற்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அவர்களிற்கான இரண்டாவது டோஸ் வழங்குவதற்கான திட்டம் அடுத்த கிழமையில் இருந்து ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (7-4-6-299)

# கொரோனா தொடர்பான ஆலோசனைகளிற்காக விசேட தொலைபேசி இலக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 தொற்றுத் தொடர்பாக மக்கள் சுதேச மருத்துவ ரீதியான அறிவுரைகள் மற்றும் அது தொடர்பான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள மத்திய அரசினால் நாடளாவிய ரீதியாக விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வட மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி. திருமதி. கனகேஸ்வரி ஜெபநாமகணேசன் தெரிவித்தார்.

அதற்கமைய யாழ்.மாவட்டம்-070 680 0371, கிளிநொச்சி மாவட்டம்-070 [illegible] 0374, முல்லைத்தீவு மாவட்டம்-070 680 0375, வவுனியா மாவட்டம்-070 680 0373, மன்னார் மாவட்டம்-070 680 0372 என்பனவாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட இலக்கங்களுடன் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தொடர்பினை மேற்கொள்வதன் மூலம் கொவிட்-19 தொடர்பாக ஆலோசனைகளை தாமதமின்றி [illegible] முடியும் எனவும் தெரிவித்தார்.(4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

26.08.2021
ஆவணி 10, வியாழக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 6.52 மணிவரை
ரேவதி பின்னிரவு 12.48 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
சந்திராஷ்டமம்: பூரம், உத்தரம், சித்தாமிர்தம்

வளவன்


மேஷம்

வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தமதமாகலாம், சுற்றத்தார் சந்திப்பு இடம் பெறலாம், மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.


ரிஷபம்

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


மிதுனம்

மன நிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


கடகம்

விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.


சிம்மம்

சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உடல் ரீதியிலான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பணப் பற்றாக்குறை ஏற்படலாம்.


கன்னி

கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


துலாம்

புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.


விருச்சிகம்

காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.


தனுசு

வாகனத்தை பராமரிக்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினர் உங்கள் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மகரம்

செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.


கும்பம்

சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு, போசன சுகமுண்டு.


மீனம்

மற்றவர்கள் வாங்கிய பொருட்களை பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஆசையால் அறிவினைக் கட்டுப்படுத்த முடியும்

# கொவிட்டினால் பாதிக்கப்பட்டு குணமடைந்த சிறுவர்களுக்கு ஒட்சிசனின் அளவு குறைவதற்கான சாத்தியம் உள்ளது

## இது பாரதூரமானது என்கிறார் விசேட மருத்துவர் நலின்

**(கொழும்பு)**

**கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்த சிறுவர்கள் சைலண்ட் ஹைபொக்ஸியா (Silent hypoxia) எனப்படும் நோயினால் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவின் பொறுப்பாளர் விசேட மருத்துவர் நலின் கித்துல்வத்த இதனை தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

"கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டு குணமடைந்த சிறுவர்கள் தோற்றத்தில் சிறந்த முறையில் இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் அவர்களின் ஒட்சிசனின் அளவு குறைவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

அவ்வாறு ஒட்சிசனின் அளவு குறைவடையுமாக இருந்தால், சிறுவர்களுக்கு சுவாசிக்க முடியாத பேச முடியாத நடக்க முடியாத நிலைமை ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தவித அறிகுறிகளும் இல்லாது ஒட்சிசனின் அளவு குறைவடைவதை சைலண்ட் ஹைபொக்ஸியா என்பார்கள். இவ்வாறான நோயாளர்கள் தற்போது அடையாளம் காணப்படுகின்றனர்.

கொவிட் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த சிறந்த முறையில் விளையாடும் சிறுவர்களுக்கு விளையாடும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஒட்சிசன் குறையும் நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளது.

இது பாரதூரமான ஒன்று. ஆகையினால் நாளொன்றிற்கு இரண்டு தடவைகள் சிறுவர்களின் இரத்தத்திலுள்ள ஒட்சிசனின் அளவை கணிப்பிட்டுக் கொள்வது சிறந்தது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது ஒட்சிசனின் அளவு 96 அல்லது 94 வீதத்திற்கு குறைவாக காணப்படுமாக இருந்தால், குறித்த சிறுவர்களை உடனடியாக மருத்துவமனையில் அனுமதிப்பது அவசியம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பயணக்கட்டுப்பாடு பொருந்தாது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு பொருந்தாது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்குள் பிரவேசிக்க முடியும்.

எவ்வாறிருப்பினும் Bio-bubble திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்கு மாத்திரமே சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவர்.

சுற்றுலாப் பயணிகள் தங்களுக்கான ஹோட்டல்களுக்கு அறிவித்து தாம் தங்குவதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# தடுப்பூசி பெற்றதை உறுதிப்படுத்தும் டிஜிட்டல் அட்டை விநியோகம்

(கொழும்பு)

கொரோனா வைரஸிற்கு எதிரான இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தும் டிஜிட்டல் அட்டை விநியோகிக்கப்படவுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதியின் பின்னர் இந்த டிஜிட்டல் அட்டைகளை விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# 3 ஆவது டோஸின் தேவை குறித்து ஒக்டோபரில் ஆராயப்படும்

## அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒக்டோபர் மாதத்தில் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்கெதிரான 3 ஆவது டோஸின் தேவை தொடர்பில் ஆராயப்படும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் மாதம் அளவில் நாட்டின் சகலருக்கும் தடுப்பூசியை ஏற்றும் பணியை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்சமயம் ஒரு கோடி 20 இலட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு முதல் டோஸ் ஏற்றப்பட்டிருக்கின்றது. இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டோரின் மொத்த எண்ணிக்கை 60 லட்சத்தைக் கடந்திருப்பதாகவும் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன மேலும் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தை பயனுள்ளவகையில் பயன்படுத்தி கற்றலில் ஈடுபடுங்கள்

## வடமாகாண கல்வி பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் மூடப்பட்டுள்ள சூழ்நிலையில் தொலைக் கல்வி முறையில் வீட்டிலிருந்தவாறே சுய கற்றலில் ஈடுபடுங்கள் என வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2021 ஆம் ஆண்டிற்குரிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த(உ/த) பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை என்பன நடைபெறவுள்ளன.

அத்துடன் நிகழ்நிலையில் நடைபெறுகின்ற பரீட்சை களுக்குத் தோற்றுவதன் மூலம் பொதுப் பரீட்சைகளிற்கு மாணவர்கள் தங்களைத் தயார்படுத்த முடியும்.

மாணவர்கள் வீட்டில் இருந்தவாறே சுயமாகக் கற்கக் கூடிய ஏராளமான கற்றல் வளங்கள் பாடநூல்களிலும், இணையத்தளங்களிலும் , YOU TUBE தளங்களிலும் காணப்படுகின்றன.

அத்துடன் Zoom இனூடாக இலவசமாக நடத்தப்படுகின்ற வகுப்புக்களில் மாணவர்கள் கற்க முடியும். மாகாணக் கல்வித் திணைக்களத்தினது edu.dept.gov.lk எனும் இணையத்தளத்தில் சகல வகுப்புக்களுக்குமான கற்றல் வளங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன.

அத்துடன் LMDM அலகினது LMDMU You tube தளத்திலும் சகல வகுப்புக்களுக்கும் ஆயிரக் கணக்கான அலகு ரீதியான கற்றல் காணொலிகளைப் பார்வையிட்டு சுயமாகக் கற்க முடியும்.இணைய வசதி அற்ற மாணவர்களுக்கும் கையேடுகள் மாகாணக் கல்வி திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

எனவே பாடசாலைகள் நடைபெறாத இச் சூழ்நிலையில் மாணவர்கள் நேரத்தினைப் பயனுள்ள வகையில் பயன் படுத்திக் கற்றலில் ஈடுபடுமாறும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டார். (4-7)

# வர்த்தக நிலையங்கள் மீது கள ஆய்வு

(குப்பிழான்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசனின் கட்டளைக்கு அமைவாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் வர்த்தக நடவடிக்கை மற்றும் எரிவாயு தொடர்பான முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டன.

இதன்போது யாழ்ப்பாணம், நாவாந்துறை, அராலி, கொக்குவில், கைதடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற வர்த்தக நடவடிக்கை மற்றும் எரிவாயு தொடர்பான முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதுடன் சட்டவிரோதமான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

(4-7-18)

# ஊழல் செய்தேன் என நிரூபித்தால் அரசியலில் இருந்து விலக தயார்

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு ரூபாய் பணம் திருடியதாக நிரூபித்தால் தான் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன் என யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தால் எதிர்காலத்தில் வழக்கு தொடரவும் தான் தயாரென அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில், மாநகர எல்லைக்குள் இரவோடிரவாக விளம்பர பலகை அமைப்பதில் ஏற்பட்ட சர்ச்சை தொடர்பாக உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாநகர எல்லைக்குள் இருக்கின்ற வரலாற்று புகழ் பெற்ற இடங்களை காட்சிப்படுத்துவதற்கும் அதனூடாக சுற்றுலாப் பயணிகளை தூண்டுவதற்கும் மாநகர எல்லைகளை அடையாளப்படுத்துவதற்கும், நாங்கள் வீதியிலே விளம்பர் பலகைகளை அமைக்க அனுமதி தாருங்களென வீதி அபிவிருத்தி அதிகாரி சபைக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

இந்த விளம்பர பலகை ஒன்றின் மூலம் ஒரு வருடத்துக்கு ஏறத்தாழ ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வருமானம் கிடைக்கும். மொத்தமாக 20 இலட்சம் வரை எதிர்பாராத ஒரு வருமானம் கிடைக்கவுள்ளது. அதேபோல் ஒவ்வொரு வருடமும் இந்த தொகை மாநகர சபைக்கு கிடைக்கும்.

இது தொடர்பாக அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதி கேட்டபோது வீதியை பயன்படுத்துவதற்கான அபிவிருத்தி கட்டணமாக 8 இலட்சம் ரூபாய் செலுத்தவேண்டுமென கோரப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை கோரிய 8 இலட்சம் ரூபாய் அதிகமெனக்கூறி[illegible] விளம்பர நிறுவனங்களும் முன்வராத நிலையில் "மாநகரம் அன்புடன் வரவேற்கின்றது" என்ற விளம்பர பலகையை அமைக்க முடியாமல் போய்விடும் என்பதற்காக நான் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 50 வீதம் குறைக்க சிபாரிசு செய்தேன். அதை குறைப்பதும் குறைக்காமல் விடுவதும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடைய தீர்மானத்திற்குப்பட்டது.

நான் இவற்றில் ஊழல் செய்ததாக நிரூபித்தால் அரசியலை விட்டுவிலக தயார். அதேபோல அந்த பணத்தின் இரு மடங்கை நான் வழங்க தயார்.

என்னுடைய சம்பள பணத்தை நான் இன்னொருவருக்கு வழங்குகிறேன்.

அப்படிப்பட்ட நான் சவால் விடுகிறேன். நான் ஒரு ரூபாய் பணம் திருடியதாக நிரூபியுங்கள் நான் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன் என அவர் தெரிவித்தார்.(4-7-33)




## சர்வ நலன்களை கரங் கூப்பி பெற்றிடு

நாதனுக்கே நாதனாம் சுவாமிநாதனை வழிபட்டு
அறிவைப் பெற்றிடு தானைக்கே அதிபதியாம்
தேவ சேனாபதியை வணங்கிடு மறத்தை
ஒருங்கே வளர்த்திடு அசுரனுக்கே அசுரனாம்
சூரனை அவன்தன் மமதையை வதைத்திட்டு
குக்குடமும் மயிலுமாக அவதரிக்க வைத்திட்டு
பூரண அடைக்கலம் நல்கியவனை பூசித்திட்டு
தமிழ் தெய்வ மகனை மானசீகமாய் வழுத்திட்டு
சர்வ நலன்களை கரங்கூப்பி பெற்றிடு...

எஸ். யு. சிவம்
ஏழாலையம்பதி

## தோகை மயில் மீதமர்ந்து வருவான்

உள்ளத்தில் உன்னை வைத்து
உனைத்தினம் -பூசைசெய்து- பக்தி
வெள்ளத்தில் திளைத்திருப்பேனே- முருகா
உன்னருள் வேண்டிநின்றேனே

ஆறுபடை வீடு சென்று
ஆறுமுகனைப் பணிந்தேன்- நீ
ஏறுமயில் ஏறிவந்தாயே- நல்லூருக்கு
அடியவர்வினை நீக்க வந்தாயே

மங்கள நாதம் கேட்க
ஓங்கார மணியும் ஒலிக்க
எங்கெங்கும் பக்தர் கூட்டம்- முருகா
நல்லூரான் அபயமென்றான்

தோகை மயில் மீதமர்ந்து
தோகையர் இருவருடன்
பாங்காகப் பவனி வருவான்- நல்லூரான்
பரவசம் கொள்வானடி

சி.சிவானந்தராஜா

## வேடன் விரித்த வலை

வேடன் விரித்த வலையில் பட்சிகள்
அகப்பட்டு துடிப்பது போல் துடிக்கிறோமே
முருகா! நல்லைக் கந்தா உன் சிரிப்பிற்கோ
குறையில்லை எம்மனம் இலை நீர் போல்
தழிம்பித் தவிக்குதே, இந்த கொடிய
கொரோனா எங்கிருந்து வந்ததோ, ஏன்
வந்ததோ புரியலையே, விஞ்ஞானிகள் பலர்
முயன்றும் தீரவில்லை, நாம் புழுப்போல்
துடித்து மாண்டு மடியலாமா? செய்த
தவறை மன்னித்து காத்தருள மாட்டாயா?



கலாபூசணம்-திருமுருகன்
ந.சிவசுப்பிரமணியம்
நீர்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியுரிமை வழங்குவது தொடர்பில் உணர்வுபூர்வமாக முடிவெடுக்க முடியாது

## இந்திய மத்திய அரசு அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை அகதிகள் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்பதால், அவர்களுக்கு குடியுரிமை வழங்கும் விடயத்தில் உணர்ச்சிபூர்வமாக தீர்மானம் எடுக்க முடியாது என இந்திய மத்திய அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.**

இந்த விடயம் தொடர்பில் சட்டத்திற்குட்பட்டே தீர்மானங்களை எடுக்க முடியும் என இந்திய மத்திய அரசு சார்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளுக்கான குடியுரிமை வழங்குவது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையினால் ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்தாமைக்கு எதிராக மற்றுமொரு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும், குறித்த மனுவுக்கு எதிராக இந்திய அரசு தரப்பில் மற்றுமொரு எதிர் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கு உரியவாறு அறிவித்தல் கிடைக்காமையால் வழக்கு விசாரணையை நீதிபதிகள் குழாம் ஒத்திவைத்துள்ளது.

மூன்று வாரங்களுக்கு மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், பிரதிவாதிகளுக்கு அறிவித்தலை அனுப்புமாறும் உத்தரவிட்டுள்ளது.

திருச்சி கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த பலரால் தங்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க உத்தரவிட வேண்டும் என கோரி, 2009 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த 2019 ஆம் ஆண்டு விசாரணை செய்யப்பட்டது. மனுதாரர்கள் அனைவரும் குடியுரிமை கோரி, திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் புதிதாக விண்ணப்பிக்கவும், அந்த விண்ணப்பங்களை திருச்சி மாவட்ட ஆட்சியர் மத்திய அரசுக்கு தாமதம் இன்றி அனுப்பி, உரிய நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை முறையாக நிறைவேற்றாத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. நிலுவையிலுள்ள இந்த வழக்குக்கு எதிராகவே இந்திய அரசினால் மற்றுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி மற்றும் நீதிபதி துரைச்சாமி ஆகியோர் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (நி-4)

# ஆரோக்கியமான சமூக மேம்பாட்டிற்கு கல்கி அனுக்கிரகம் அளிக்கிறார்



"பெண்களின் உண்மையான தனித்துவம் அவர்களுடைய ஆன்மீக மையத்தில் உள்ளது." - ஸ்ரீ அம்மா - வரலாற்றில் பெண்கள் மிகவும் உன்னதமான நிலையில் இருந்தனர் அதற்கு முக்கிய காரணம் அவர்கள் ஆன்மீகத்தில் உன்னதமான நிலையை அடைந்திருந்தனர்.

மீண்டும் பெண்கள் சமுதாயத்தில் மிகச் சிறந்தவர்களாக வளர்வதற்கு அவர்களுக்கு மிகவும் தேவையானது ஆன்மீக வளர்ச்சி ஆகும். பெண்கள் ஆன்மீக நிலையில் உயரும் போது அவர்களது குடும்பம் மிகவும் செழிப்பாக வளரும். இதன்மூலம் சமுதாயம் வளரும். சமுதாயம் வளரும் போது நாடு செழிப்பாக இருக்கும். இதன்மூலம் உலகம் முழுவதும் செழிப்பாக இருக்கும்.

பெண்கள் ஆன்மீகத்தில் வளரும் போது அவர்கள் தமக்குள் இருக்கும் மகிழ்ச்சி, புத்திசாலித்தனம், சக்தி, விடாமுயற்சி, சகிப்புத்தன்மை, அன்பு, இரக்கம் மற்றும் உணர்திறன் ஆகியவற்றின் அதிக ஆற்றலைக் கண்டுபிடிக்க முடியும்.

இவ்வாறு மாற்றம் அடைந்த பெண்களே மகிழ்ச்சியான மற்றும் புத்திசாலித்தனமான தனிநபர்களாகவும், நட்பான மனைவி, அன்பான தாய், ஆன்மீக வலிமையின் ஆதாரமாக மற்றும் சமூகத்திற்கு ஒரு சொத்தாக திகழ்கிறார்கள். கல்கி தர்மம், பெண்களின் உண்மையான அடையாளத்தை வளர்த்தால் மட்டுமே பெண்கள் சமூகத்தின் மாற்றத்திற்கான ஒரு கருவியாக மாற முடியும் என்று நம்புகிறது.

கல்கி தர்மம் மூலம் நடத்தப்படும் பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சியில் பங்குபெறும் ஒவ்வொருவரதும் சைதன்யத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவத்ன் மூலம் அவர்களுக்கு தேவையான ஆரோக்கியம், ஐஸ்வர்யம், கல்விமேன்மை, தொழில் அபிவிருத்தி, சுய மேம்பாடு, குடும்ப உறவுகள் பலம் அடைந்து குடும்பத்தில் உள்ள அனைவரும் ஆனந்த வாழ்வு பெற, ஆரோக்கியமான சமூக மேம்பாடு அடைய கல்கி அனுக்கிரகம் அளிக்கிறார்.இவ் சிறப்பு நிகழ்ச்சி பிரதி வாரம் வெள்ளிக்கிழமைகளில் மதியம் 12:25 மணிக்கு Zoom App மூலம் நடைபெறும்.இணைய விரும்புபவர்கள் மேலதிக விபரங்களுக்கு 0773647436 , 0776845463எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணப்பொதி- அரசு தீர்மானம்

(கொழும்பு)

சுகாதாரத் துறையினரின் ஆலோசனையின்பேரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாத்திரம் 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் அடங்கிய பொதியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் பொதிகளையே இவ்வாறு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு அமைய செயற்படுமாறு, பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டு [illegible] விக்கப்படுகிறது. (நி-4)

# செய்தித்துளிகள்

## விமானப்படைத் தளபதிக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

விமானப் படையின் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன் பத்திரணவும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-4)

## சுகாதார விதிமுறை மீறல் மேலும் 705 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் மொத்தம் 705 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 58 ஆயிரத்து 414 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தை விட்டு வெளியேற முயன்ற 458 வாகனங்களில் பயணித்த 735 நபர்களும், உள்நுழைய முயன்ற 570 வாகனங்களில் பயணித்த ஆயிரத்து 72 நபர்களும் நேற்று தனிமைப்படுத்தல் விதிமுறைகளின் கீழ் 13 வெளியேறும் மற்றும் உள்நுழையும் சோதனைச் சாவடிகளில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (நி-4)

## கலால் திணைக்கள தலைமையகத்தில் 10 பிரிவுகளுக்கு பூட்டு

(கொழும்பு)

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமையகத்தின் 10 பிரிவுகள் மூடப்பட்டுள்ளதாக ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட 10 பிரிவுகளில் 21 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதுடன் மதுவரித் திணைக்களத்தின் அதிகாரியொருவரும் கொவிட்-19 தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார்.

அத்தியாவசிய நடவடிக்கைகள் சுழற்சி அடிப்படையில் ஊழியர்கள் மூலம் முன்னெடுக்கப்படுவதாகவும் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# டெல்டா வகையின் தீவிரத்தன்மையால் தடுப்பூசியின் செயற்றிறன் குறைகிறது

## அமெரிக்கா சுகாதார அமைப்பு

(வோஷிங்டன்)

**டெல்டா கொரோனா வைரஸின் தீவிரத்தன்மைக் காரணமாக தடுப்பூசியின் செயற்றிறன் குறைகிறது என அமெரிக்க சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

டெல்டா வகை கொரோனா தீவிரமடைந்த பிறகு, முன்கள பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசியின் செயற்றிறன் 66 சதவிகிதமாக குறைந்துள்ளது என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. இவ் வகை கொரோனா பரவுவதற்கு முன்பு தடுப்பூசியின் செயற்றிறன் 91 சதவிகிதமாக இருந்தது.



நோயின் தன்மை மற்றும் இறப்பு விகிதம் குறித்து நோய் கட்டுப்பாடு மையம் வெளியிட்ட வாராந்திர அறிக்கையில், "தடுப்பூசி பாதுகாப்பளிக்கிறது. இது குறித்த ஆய்வுகள் கவனமாக விளக்கப்பட வேண்டும். கால போக்கில் தடுப்பூசியின் செயற்றிறன் குறைந்து அதன் பயன்பாடு குறித்த கணக்கீடு துல்லியமற்றதாக மாறுகிறது.

நோய் தடுப்பில் கொரோனா தடுப்பூசியின் செயற்றிறன் குறைவதாக இடைக்கால ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்ட போதிலும் நோய் பரவலானது மூன்றில் இரண்டு பங்காக குறைந்திருப்பது தடுப்பூசியின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் எடுத்துரைக்கிறது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெல்டா வகை கொரோனா தீவிரமடையும் பட்சத்தில் தடுப்பூசியின் ஆற்றல் குறையும் என இஸ்ரேல் மற்றும் பிரிட்டன் நாடுகள் மேற்கொண்ட ஆய் விலும் தெரியவந்துள்ளது. (7-4)

# தமிழகத்தில் அங்கன்வாடி மையங்கள் திறக்க அனுமதி

(சென்னை)

அங்கன்வாடி மையங்கள் எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் திறக்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இதையடுத்து இதற்கான வழிகாட்டு நெறி முறைகளும் வெளியிடப்பட்டுள்ளன. அதன்விவரம்வருமாறு,

2 முதல் 6 வயது குழந்தைகளுக்கு பகல் 11.30 மணி முதல் 12.30 மணிவரை மதிய உணவு வழங்க வேண்டும், அங்கன்வாடி ஊழியர்கள் 2 தவணை கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும், அங்கன்வாடி ஊழியர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும், வளாகங்கள், சமைய லறை உள்ளிட்டவற்றை தூய் மைப்படுத்தி பின் பயன்படுத்த வேண்டும், அங்கன்வாடி மையங் களுக்கு வரும் 2 முதல் 6 வயது குழந்தைகள் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை,அங்கன்வாடி ஊழியர் களுக்கு கொரோனா அறிகுறிகள் இருந்தால் மையத்திற்கு வருவதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (7-4)

# ஆப்கானிஸ்தானில் இருந்து அழைத்து வரப்பட்டோருக்கு தொற்று உறுதி

(புதுடில்லி)

ஆப்கானிஸ்தானில் இருந்து 25 இந்திய குடிமக்கள் உட்பட 78 பேர் விமானப்படை மூலம் தஜிகிஸ்தான் அழைத்து வரப்பட்டனர். அங்கிருந்து ஏர் இந்திய மூலம், புதுடில்லி விமான நிலையத்திற்கு வந்த 78 பயணிகளுக்கும் கொரோனா பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

அதில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 78 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானில் இருந்து இதுவரை 228-இந்திய குடிமக்கள் உட்பட 626 பேர் மீட்கப்பட்டு இந்தியா வந்துள்ளதாக மத்திய மந்திரி ஹர்தீப் புரி தெரிவித்துள்ளார். (7-4)

# பஹ்ரைன் மீதும் பெகாஸஸ் உளவு குற்றச்சாட்டு

(ஜெருசலேம்)

பஹ்ரைனிலும் இஸ்ரேல் நிறுவனத்தின் பெகாஸஸ் உளவு மென்பொருளைப் பயன்படுத்தி 9 தன்னார்வலர் களின் செல்லிடப் பேசிகள் வேவுபார்க்கப்பட்டதாக கனடா விலுள்ள டொரன்டோ பல்கலைக்கழகத்தின் இணையதளக் கண்காணிப்பு அமைப்பான சிட்டிஸன் லேப் குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள பெகாஸஸ் உளவு மென்பொருளைப் பயன்படுத்தி, இந்தியா உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாடுகளில் ஆயிரக்கணக்கானவர்களின் செல்லிடப்பேசிகள் உளவு பார்க்கப்பட்டதாக சர்வதேச ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு அண்மையில் வெளியிட்ட புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட ஊடகங்கள், தன்னார்வலர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளிட்டோரின் செல்லிடப்பேசிகள் பெகாஸஸ் மென்பொருள் மூலம் உளவு பார்க்கப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகள், கடுமையான குற்றவாளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக நாடுகளின் அரசுகளுக்கு மட்டுமே பெகாஸஸ் உளவு மென்பொருள் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், அந்த மென்பொருளைக் கொண்டு ஆட்சியாளர்களுக்கு எதிரானவர்கள் உளவு பார்க்கப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல் சம்பந்தப்பட்ட நாடுகளில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (7-4)

# ஆப்கானிஸ்தானியர்கள் தாயகம் திரும்ப அழைப்பு விடுக்கிறோம்

## தலிபான்கள் அறிவிப்பு

(காபூல்)

நாங்கள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற்றுவதை இனி அனுமதிக்க மாட்டோம், அதில் நாங்கள் மகிழ்ச்சியடையவில்லை. தாயகத்தை விட்டு ஆப்கானிஸ் தானியர்கள் வெளியேறும் நோக்கத்துடன் விமான நிலையம் செல்வதை தலிபான்கள் விரும்பவில்லை.

அதே சமயம், அமெரிக்கா மற்றும் அதன் தலைமையிலான கூட்டுப் படையினருடன் வேலை செய்த ஆப்கானிஸ்தானியர்கள் செல்லலாம் என தலிபான் கள் செய்தி தொடர்பாளர் ஜபியுல்லா முஜாஹித் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானின்வைத்தியர்கள் மற்றும் கல்வியாளர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறக்கூடாது, அவர்கள் தங்கள் சொந்த சிறப்புப் பகுதிகளில் பணியாற்ற வேண்டும்.

வெளிநாட்டில் உள்ள ஆப்கானிஸ்தானியர்கள் தாயகம் திரும்ப அழைப்பு விடுக்கிறோம். இங்கே திரும்பி வாருங்கள். நமது நாட்டை நாமே கட்டியெழுப்புவோம். போர் முடிந்து விட்டது. இனி இங்கேயே வேலை செய்யுங்கள், இயல்பாக வாழுங்கள். யாருக்கும் எந்த ஆபத்தும் கிடையாது.

ஆப்கானிஸ் தானில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு பாதுகாப்பு கிடைப்பதை உறுதிப்படுத்துவோம். அவர்கள் தங்களுடைய பணிகளை நிறுத்தாமல் தொடர்ந்து செய்யலாம்.

ஆப்கானிஸ்தான் முழுவதும் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், மதரசாக்கள், மருத்துவமனைகள், உள்ளூர் அரசு மற்றும் தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் எப்போதும் போல செயற்படலாம் என கூறினார். (7-4)

# தடுப்பூசி போடாதவர்களுக்கு கொரோனா பரிசோதனை இரத்து

(ஏதென்ஸ்)

கிரீஸ் நாட்டில் கடந்த சில நாட்களாக தினசரி கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் கிரீஸ் நாட்டில் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக தடுப்பூசி செலுத்தும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில் இதுவரை 53 சதவீதம் பேர் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர். இந்த எண்ணிக்கையை அடுத்த ஒரிரு மாதங்களில் 70 சதவீதமாக உயர்த்த கிரீஸ் நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக புதிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

அதன்படி வரும் செப்டம்பர் 13 ஆம் திகதி முதல் கிரீஸ் நாட்டில் தடுப்பூசி போடாதவர்களுக்கு இலவசமாக கொரோனா பரிசோதனை செய்வதை நிறுத்தவும், வாரம் ஒன்று அல்லது இரண்டு முறை கட்டணம் செலுத்தி கொரோனா பரிசோதனை செய்து கொள்ள உத்தரவிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதே சமயம் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், அவசியம் ஏற்படும் நேரத்தில் இலவசமாக கொரோனா பரிசோதனை செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை அமுல்படுத்து வதன் மூலம் கிரீஸ் நாட்டில் கொரோனா தடுப்பூசி செலுத் தியவர்களின் எண்ணிக் கையை அதிகரிக்க [illegible] தெரிவித்துள்ளது. (7-4)

# கொலராவால் 1768 பேர் பலி

(அபுஜா)

நைஜீரியாவில் இந்தாண்டு ஜனவரி முதல் தற்போது வரை கொலராவால் 1,768 பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு மருத்துவத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆப்பிரிக்க நாடுகளில் அடிக்கடி நிகழும் கொலரா நோயானது இந்தாண்டு மிகத் தீவிரமாக நைஜீரிய நாட்டை பாதித்தது. இதுகுறித்து நாட்டின் நோய் தடுப்புத் துறை அதிகாரி சிக்வே ஹெக்வேசு, "கொலராவால் பலியானவர்களில் 5 - 14 வயதுள்ள குழந்தைகளே அதிகம். இறப்பு விகிதமானது ஆண்கள் 51 சதவீதமாகவும் பெண்கள் 49 சதவீதமாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது" என்றார். நோய் பரவலுக்கான காரணமாக ஒழுங்கற்ற சுகாதாரம், மக்கள் நெருக்கம், கனமழையால் உருவான குட்டை நீர்கள், குப்பைகள் நிறைந்த பகுதிகள் மூலம் கொலரா கட்டுக்கடங்காமல் பரவியிருக்கிறது என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (7-4)

**உலகளவில் கொரோனா**

உயிரிழப்பு :- 4 46 7815

தொற்று :- 214 100 899

(நேற்றைய மாலை நிலைவரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 வயதிற்கு மேற்பட்ட 5 ஆயிரத்து 800 பேருக்கு தடுப்பூசி வழங்க வேண்டும்

## பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர்

(குருமன்காடு)

**வவுனியா மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட 5 ஆயிரத்து 800 பேருக்கு இராணுவத்துடன் இணைந்து வீடு வீடாகச் சென்று தடுப்பூசி வழங்கப்பட வேண்டியுள்ளது என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப் பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்தார்.**



வவுனியா மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு குறித்து நேற்று முன்தினம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்ட 98 ஆயிரம் பேருக்கு தடுப்பூசிகள் வழங்க தீர்மானித்து கடந்த மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தோம். இதுவரை 84.85 வீதமானவர்களுக்கு தடுப்பூசி வழங்கியுள்ளோம். இவ்வாறு தடுப்பூசி வழங்குவதன் மூலம் நோயாளர்களின் இறப்பு வீதம் மற்றும் தொற்று பரம்பலை கட்டுப்படுத்த முடியும். அதனால் மக்கள் முன்வந்து தடுப்பூசி பெற்று கொள்ள வேண்டும். முக்கியமாக 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இறப்பு அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றோம். வவுனியா மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட 27 ஆயிரம் பேர் உள்ளனர். அதில் 5 ஆயிரத்து 800 பேருக்கு இன்னும் தடுப்பூசி வழங்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்காக இராணுவத்துடன் இணைந்து வீடு வீடாக சென்று தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வாரம் முழுவதும் அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும். 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முழுமையாக தடுப்பூசி வழங்கி அவர்களை இறப்பு மற்றும் நோய் தொற்றில் இருந்து காப்பதே எமது நோக்கம் எனவும் தெரிவித்தார். (7-4-6-250)

# அனுமதிகள் நிறுத்தம் மணல் பெறுவதில் சிரமம்

(அக்கராயன்)

தற்போதைய முடக்க காலத்திலும் வீட்டுத் திட்டத்தினை பார்க்க வருகின்ற அதிகாரிகளினால் வீட்டுத் திட்ட வேலைகள் நடைபெறவில்லை என பயனாளிகளுக்கு பல்வேறு வழிகளில் நெருக்கடிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இதற்கு முக்கிய காரணம் வீட்டுத் திட்டத்திற்கு மணலினைப் பெற்றுக் கொள்ள முடியாது இருப்பது. வீட்டுத் திட்டங்களை வழங்குகின்ற போது பிரதேச செயலகங்களினால் மணல் அனுமதிகளும் வழங்கப்படுவது வழமை. ஆனால் தற்போது அவ் அனுமதிகள் நிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக வீட்டுத் திட்ட வேலைகளை முன்னெடுக்க முடியாது இருப்பதாக தெரிவிக்கும் வீட்டுத் திட்ட பயனாளிகள் மணலினைப் பெற்றுக் கொள்வதற்கு பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர்.

வீட்டுத் திட்டம் நடந்தால் தான் உங்களுக்கான பணம் ஒதுக்கப்படும் எனத் தெரிவிக்கும் அதிகாரிகள் மணல் தொடர்பான நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் எனவும் பயனாளிகளினால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

(7-4-6-350)

# குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்த நடவடிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு பழையமுறிகண்டி கிராமத்தில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தினை பொருத்தமான இடத்தில் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச சபையின் உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. பழையமுறிகண்டி கிராமத்தில் குடிநீர் நெருக்கடியினை தீர்க்கும் வகையில் பிரதேச சபையின் ஒழுங்குபடுத்தலில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றினை பொருத்துவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

இக்கிணற்றில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தினை பொருத்துவதன் மூலம் பழையமுறிகண்டி கிராம மக்கள் ஆண்டு முழுவதும் சுத்தமான குடிநீரினை பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை உள்ளது. பழையமுறிகண்டி கிராமத்தில் 40 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.(7-4-6-350)




# பிரதான வீதியினை சீரமைத்து போக்குவரத்து வசதி ஏற்படுத்துக

## கிராம மக்கள் கோரிக்கை

(கண்டாவளை )

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பழம்பெரும் விவசாய கிராமங்களான தென்னியன் குளம், கோட்டை கட்டிய குளம், அம்பலப் பெருமாள் குளம் உள்ளடங்கலாக சுமார் 10க்கும் மேற்பட்ட விவசாயக் கிராமங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இந்த குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகள் இன்மை காரணமாக குறித்த கிராம மக்கள் வேறு தேவைகளுக்காக பல்வேறு பிரதேசங்களுக்கும் செல்லவேண்டியுள்ளது.

இந்த நிலையில் குறித்த பிரதேசத்தின் பிரதான வீதியாக காணப்படுகின்ற வீதிகள் இது வரை உரிய முறையில் புனரமைக்கப்படாமை மற்றும் போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக தாங்கள் பெரிதும் கஷ்டப்படுவதாக கிராம மக்கள் சுட்டிக்கட்டியுள்ளனர் எனவே தங்கள் கிராமங்களுக்கான பிரதான வீதியை புனரமைத்து போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (7-4-6-315)



முல்லைத்தீவு மாவட்டத்திலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வீடுகளுக்கு சென்று தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று முன்தினம் முதல் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (படம் :- தவசீலன்)

# 60 வயதிற்கு மேற்பட்டோரில் 69.5 வீதமானோர் தடுப்பூசி பெற்றவர்கள்

## மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களில் முதலாவது தடுப்பூசி 69.5 சத வீதத்தினர் மாத்திரம் பெற்றுக் கொண்டுள்ள போதும் சுமார் 5 ஆயிரத்து 626 பேர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாமல் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

-மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக்காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 60 வயதுக்கு மேற்பட்ட இது வரை தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு அவர் களின் வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது அதனடிப்படையில் நேற்று முன்தினம் மாத்திரம் சுமார் 600 க்கும் மேற்பட்டவர்களுக்கு முதலாவது தடுப்பூசி 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் முதலாவது தடுப்பூசி 78 சதவீதமானவர்களும்,2 ஆவது தடுப்பூசி 64 சதவீதமானவர் களும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மேலும் மன்னார் மாவட்டத்தில் புதிதாக 66 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது கொரோனா தொற்றாளர்கள் இரு வகை அறிகுறிகளுடன் காணப்படுகின்றது. ஒரு வகையானவர்களுக்கு உடல் நோவு, காய்ச்சல், தலையிடி போன்றவையும், அடுத்த வகையானவர்களுக்கு காய்ச்சல், இருமல், தொண்டை நோவு மற்றும் சுவாசிப்பதில் சிரமம் போன்ற வற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனைத்தவிர கொரோனா தொற்றின் எவ்வித அறிகுறிகளும் இல்லாமல் தொற்றுடன் அடையாளம் காணப்படுகின்றன.

இருமல், கடுமையான காய்ச்சல், தலையிடி, தொண்டை நோவு ,சுவாசிப்பதில் சிரமம் உள்ளவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்படுகின்றவர்கள் தற்போது வீடுகளில் வைக்கப்படுகின்றனர்.


இவ்வாறு வைக்கப்படுகின்ற வர்கள் ஓய்வு நிலையில் இருக்க வேண்டும் என்பதோடு, நீர் ஆகாரங்களை உட்கொள்ள வேண்டும். ஏதாவது உடலில் பிரச்சனைகள் ஏற்பட்டால் உரிய சுகா தார அதிகாரிகளை தொடர்பு கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-4-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

**17**

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



| அட்டவணை 4B- மத்திய மாகாண சபைத் தேர்தல் 1993 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | கட்சிகள் | | | | | |
| | UNP | PA | DUNF | தொ.தே.ச | சுயேட்சை | மொத்தம் |
| கண்டி | 14 | 9 | 5 | - | | 28 |
| மாத்தளை | 6 | 3 | 2 | - | | 11 |
| நுவரெலியா | 10 | 3 | 2 | 1 | 1 | 17 |
| Bonus | 2 | - | - | - | | 2 |
| மொத்தம் | 32 | 15 | 9 | 1 | 1 | 58 |

தொ.தே.ச - தொழிலாளர் தேசிய சங்கம்

| அட்டவணை 4C- தென் மாகாண சபைத் தேர்தல் 1993 | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | கட்சிகள் | | | |
| | UNP | PA | DUNF | மொத்தம் |
| காலி | 10 | 10 | 2 | 22 |
| மாத்தறை | 8 | 7 | 2 | 17 |
| ஹம்பாந்தோட்டை | 7 | 5 | 2 | 14 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 27 | 22 | 6 | 55 |

| அட்டவணை 4D<br>வடமேல் மாகாண சபைத் தேர்தல் 1993 | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | கட்சிகள் | | | |
| | UNP | PA | DUNF | மொத்தம் |
| குருநாகல் | 15 | 13 | 7 | 35 |
| புத்தளம் | 8 | 5 | 2 | 15 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 25 | 18 | 9 | 52 |

| அட்டவணை 4E- வடமத்திய மாகாண சபைத் தேர்தல் 1993 | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | கட்சிகள் | | | | |
| | UNP | PA | DUNF | SLMC | மொத்தம் |
| அனுராதபுரம் | 11 | 7 | 2 | 1 | 21 |
| பொலன்னறுவை | 5 | 4 | 1 | - | 10 |
| Bonus | 2 | - | - | - | 2 |
| மொத்தம் | 18 | 11 | 3 | 1 | 33 |

| அட்டவணை 4F<br>ஊவா மாகாண சபைத் தேர்தல் 1993 | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | கட்சிகள் | | | |
| | UNP | PA | DUNF | மொத்தம் |
| பதுளை | 11 | 5 | 3 | 19 |
| மொனறாகலை | 7 | 5 | 1 | 13 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 20 | 10 | 4 | 34 |

(1) ஊவா மாகாண

| அட்டவணை 4G- சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் 1993 | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | கட்சிகள் | | | | |
| | UNP | PA | DUNF | ந.ச.ச.க | மொத்தம் |
| இரத்தினபுரி | 12 | 8 | 2 | 1 | 23 |
| கேகாலை | 10 | 6 | 3 | - | 19 |
| Bonus | 2 | - | - | - | 2 |
| மொத்தம் | 24 | 14 | 5 | 1 | 44 |

ந.ச.ச.க - நவசமசமாஜகட்சி

வடமேல் மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் இணைந்து வழங்கிய மாகாணசபை அமைக்கும் விண்ணப்பத்தினை இரண்டு மாகாண ஆளுநர்களும் நிராகரித்தனர்.

தொடர்ந்து இவ்விடயமாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் சார்பாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது.

### முக்கிய நிகழ்வு

1993-05-01 ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின ஊர்வலத்தை ஏற்பாடு செய்து கொண்டிருந்த வேளையில், அத்தினம் நண்பகல் 12.48 மணியளவில் கொழும்பு ஆமர்வீதி பொலிஸ் நிலையச் சந்தியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பினால் இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொலை செய்யப்பட்டார்.

இதையடுத்து சட்ட ஏற்பாடுகளுக்கமைய 1993-05-07 ஆம் திகதி டிங்கிரி பண்டா விஜயதுங்கவை மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பாராளுமன்றம் தேர்ந்தெடுத்தது. இதனால் காலியான பிரதமர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அதன்படி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பத்தாவது பிரதமராவார்.

### தென்மாகாணத்தில் முதலமைச்சர் யார்?

1993-05-17 ஆம் திகதியன்று நடைபெற்ற இலங்கையின் 2 ஆவது மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவுகளை அவதானிக்கையில் தென்மாகாண, வடமேல் மாகாண முடிவுகள் அனைவரினதும் அவதானத்தை ஈர்க்கத்தக்க முறையில் அமைந்திருந்தன. காரணம் தென்மாகாணத்தில் ஐக்கிய தேசியக்கட்சி 27 உறுப்பினர்களையும், பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கிய முன்னணியும் **(DUNF)** இணைந்து பெற்றிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 28 ஆகும்.

இதேபோல் வட மேல் மாகாணத்தில் ஐக்கிய தேசியக்கட்சி 25 (23+2) உறுப்பினர்களையும் பொது சன ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கிய முன்னணியும் (DUNF) இணைந்து பெற்றிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 27 ஆகும்.

27 உறுப்பினர்களைக் கொண்டுள்ள U.N.P க்கா? அல்லது 28 உறுப்பினர்களைக் கொண்டுள்ள PA, DUNF கூட்டிற்கா? என்ற நிலையேற்பட்டது.

இந்நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணி (PA) செயலாளர் D.M. ஜயரத்ன மற்றும் ஜனநாயக ஐக்கிய முன்னணி (DUNF) செயலாளர் G.M. பிரேமசந்திர கையொப்பமிட்டு தென்மாகாண ஆளுசர் அல்ஹாஜ் M.A.பாக்கீர் மாகாருக்கு அனுப்பிய கடிதத்தில் PA,DUNF இணைந்து அரசாங்கத்தை அமைக்க விரும்புவதாகவும் (காரணம் U.N.P I விட தமக்கு 1 ஆசனம் அதிகமாக வுள்ளமையே) அதனால் தென்மா காண முதலமைச்சராக அமரசிறி தொடங்கொடவை நியமிக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. UNP குழுத்தலைவர் M.S. அமரசிறி முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இத் தெரிவைப்பற்றி கருத்துத் தெரிவித்த அரசியல் அறிஞர்கள் 1947 இல் தேசாதிபதி மேசன் மூவர், D.S. சேனநாயக்கவைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்ததையும், 1960 மார்ச்சில் மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குனதிலகா, டட்லி சேனநாயக்கவை பிரதமராகத் தேர்ந்தெடுத்ததையும் ஒத்ததாக அமைந்துள்ளது என்றனர்.

தென் மாகாண மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கு முதலமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆட்சேபித்து வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. 1993-10-08 ஆம் திகதி உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி ஆளுநரினால் தென் மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு முதலமைச்சர்கள் தெரிவு செய்யப்பட்ட முறை பிழையானது என சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து 1993-10-11ம் திகதி தென்மாகாண சபை முதலமைச்சராக அமரசிறி தொடங்கொட (PA) பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

தென்மாகாண சபையின் அமைச்சரவை 1993-10-28 ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதுடன், முதலாவது கூட்டம் காலிஹிலிடொப் மண்டபத்தில் 1993-11-05 ஆம்திகதி நடத்தப்பட்டது. தென்மாகாணசபையில் ஆளும்கட்சிக்கு (PA+DUNF) ஒரு மேலதிக வாக்கே இருந்தமையினால் முதலமைச்சரின் செயற்பாடுகளில் கணிசமான பிரச்சினைகள் எதிர் நோக்கப்படலாயிற்று.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி பெறாதிருப்பது தற்கொலைக்கு ஒப்பானது

## நீதி அமைச்சர் அலிசப்ரி



(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்டதே இக் கொவிட் தடுப்பூசியாகும். இதில் எவ்விதமான பாதக விளைவுகளும் இல்லை என உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால் இது விடயத்தில் எவரும் எவ்வித சந்தேகமும் அச்சமும் கொள்ளத்தேவையில்லை என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

எனவே, உடனடியாக அனைவரும் குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசியைப் பெற்று, தம்மையும் தமது குடும்பத்தினரையும் மரணத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதுடன் நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என தெரிவித்ததுடன் தடுப்பூசி ஏற்றுக் கொள்வது பாதகமானது என்ற தவறான கருத்துக்கள் முஸ்லிம்கள் மத்தியில் பரப்பப்பட்டிருக்கிறது. இதனால் முஸ்லிம்கள் பலர் தடுப்பூசி பெற்றுக் கொள்ள பின் வாங்குகின்றனர்.

இது குறித்து சுகாதார அமைச்சு மற்றும் பொலிஸ் தரப்பினர் என்னிடம் கவலை வெளியிட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# 816 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குகின்றது சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் 816 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறுவதற்கு இலங்கை தகுதி பெற்றுள்ளதாக அதன் நிர்வாக இயக்குனர் கிறிஸ்லீனா ஜார்ஜீவா தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சர்வதேச நாணய நிதியம் அதன் உறுப்பு நாடுகளின் வெளிநாட்டு இருப்புக்களை வலுப்படுத்த 650 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

பல நாடுகளின் நிதி நெருக்கடிக்கு இதன் மூலம் வலுவான தீர்வை வழங்க முடியும். இருப்பினும், குறித்த கொடுப்பனவிற்காக சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தங்களுக்கு உறுப்பு நாடுகள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இதற்கமைய, இலங்கையும் உரிய தொகையிலிருந்து 816 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# தடுப்பூசி ஏற்றாத சமயத் தலைவர்கள் தொடர்பு கொள்ள தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

இதுவரை தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாத சமயத் தலைவர்கள் அது தொடர்பாக கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக பிரதேச செயலகத்திற்கு அறிவிக்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

பௌத்த, இந்து இஸ்லாமிய, கிறிஸ்தவ சமய தலைவர்களிடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்காக சகல சமய தலைவர்களுக்குமான தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்து சமயத் தலைவர்கள் 071 44 71 128 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் இஸ்லாமிய சமய தலைவர்கள் 076 13 95 362 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் கிறிஸ்தவ சமய தலைவர்களுக்காக 071 40 61 132 என தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொள்ளலாம். (நி-4)



புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை குவைத் தூதுவர் கலீஃப் புதைர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினார். இலங்கை அரசாங்கத்துடன் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான குவைத் அரசாங்கத்தின் விருப்பத்தை தூதுவர் வெளிப்படுத்தினார்.

# சீன இராணுவத்திடம் இருந்து இலங்கை முப்படையினருக்கு தடுப்பூசி

(கொழும்பு)

சீன இராணுவத்தினரால், இலங்கை முப்படையினருக்கு 300,000 சைனோபாம் தடுப்பூசிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்த தடுப்பூசிகள் நாளை மறுதினம் கிடைக்கப்பெறும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வானிலை தெரிவிக்கும் விலங்குகள்

துருக்மீனியாவிலே அஷ்காபாத் என்று ஒரு நகரத்திலே. ஒரு புவி இயல் விஞ்ஞானி இருந்தார். அவர் ஒரு நாய்க்குட்டி வளர்த்தார். ஒரு நாள் முன்னிரவு நேரம். ஒரு மேசைக்கு முன்னர் உட்கார்ந்து அந்த விஞ்ஞானி ஏதோ கணக்குப் போட்டுக்கொண்டு இருந்தார்.

அவருக்கு ஒரு சின்ன பெண் குழந்தை. அது தொட்டிலிலே தூங்கிக் கொண்டிருந்தது. அந்தநாய்க்குட்டியும் ஒரு மூலையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தது. ஒரே அமைதி... அந்த நேரத்திலே திடீர் என்று அந்த நாய்க்குட்டி துள்ளி எழுந்தது. நேரா அந்த குழந்தையிடம் ஓடியது. அந்த குழந்தையை அது போட்டிருந்த டிரஸ்ஸோடு சேர்த்து கவ்வி தூக்கியது. தூக்கிக்கொண்டு வாசல் பக்கம் ஓடியது.

நாய்க்குட்டி குழந்தையை கவ்வி தூக்க முடியுமா? என்பது சந்தேகம் உங்களுக்கு. இல்லையா? நீங்கள் நம்முடைய ஊர் நாய்க்குட்டியைப் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். அதனாலே நம்புவதற்கு சிரமப்படுகிறீர்கள். அந்த ஊரிலே எல்லாம் அது ரொம்ப strong ஆக இருக்கும்.

விஞ்ஞானி அதைப் பார்த்திட்டார். உடனே அந்த நாய்க்கு வெறி பிடித்துக்கொண்டது என்று முடிவு செய்தார். தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டு ஓடி வந்தார். அவர் வெளியே வந்து நாய்க்குட்டி எங்கே என்று தேடுகிறார்.

அதே நேரத்திலே அந்த வீடு இடிந்து விழுகிறது. காரணம்.பூமி அதிர்ச்சி. இப்படி பூமிஅதிர்ச்சி உண்டாகப் போகிறது என்பது அந்த நாய்க்குட்டிக்கு முன்பே தெரிந்திருக்கிறது. அது தான் குழந்தையை தூக்கிக்கொண்டு வெளியே ஓடி வந்தது. அது மூலமாக அந்த குடும்பத்தை காப்பாற்றியிருக்கிறது.

இந்த சம்பவம் நடக்கிறதிற்கு மூன்று நாட்களுக்கு முன்பே சில பிராணிகளுக்கு இப்படி நடக்கப்போவது தெரிந்துகொள்ளும். ஆமாம்... அந்த நகரத்திலே மூன்று நாட்களுக்கு முன்னர் பாம்பு, பல்லி இவைகளெல்லாம் அது தங்கியிருந்த வளையை விட்டு வெளியே ஓடி வந்து விடும்.

அதே மாதிரி அங்கேயிருந்து புறா எல்லாம் பறந்து போயிவிட்டது. இதே போல் யூகோஸ்லேவியாவிலே ஒரு நகரம் அங்கே ஒரு நாள் இராத்திரி ஒரு மிருகக் காட்சிச் சாலையிலே திடீர் என்று ஒரு பெரிய கலவரம், கூச்சல், குழப்பம் அங்கே கழுதை, புலி, யானை, பறவை எல்லாம் கண்ணாபின்னா என்று கத்த ஆரம்பித்துவிட்டது. நீர்யானை அதற்கு என்று போட்டிருந்த தடுப்பையைத் தாண்டி குதித்து வெளியே வந்தது. மறுநாள் தான் எல்லோருக்கும் விடயம் புரிந்தது.

அடுத்த நாள் காலையிலே அங்கே பூமியதிர்ச்சி உண்டானது. இப்போது என்ன நினைக்கின்றீர்கள்? மனிதனைப் போய் தீர்க்கதரிசி அது இது என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றீர்கள் இவனை விட அது பரவாயில்லை என்று தோணுதா?

அது சரி இதெல்லாம் அது எப்படி முன்கூட்டியே புரிந்து கொள்கிறது? அதுதான் படைப்பின் இரகசியம். அதைக் கண்டுபிடிப்பதற்கு தான் மனிதன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றான். விஞ்ஞானிகளுடைய ஆராய்ச்சிகள் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். வீட்டுக்குள்ளேயே சில ஆராய்ச்சி செய்து பாருங்கள்.

இப்போது நான் சிலவற்றை சொல்லுகிறேன். அதையெல்லாம் சோதனை செய்து பாருங்கள். இப்போது மழை வருமா? வராதா? என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? உடனே ஒரு பூனைக்குட்டி பின்னால் மெதுவாகப் போய் அது என்ன செய்கின்றது என்று கவனியுங்கள்.

பூனைக்குட்டி தன்னுடைய பாதத்தினால் சுவரிலே கீறிக்கொண்டு இருக்கும். அப்படி கீறினால் கண்டிப்பாக மழை வரும். சில சமயம் பூனைக்குட்டி மல்லாந்து படுத்துக் கொண்டு பாதத்தை உயரே தூக்கும். அப்படியும் இப்படியும் புரளும். இப்படி செய்தால் அன்றைக்கு மழை இருக்காது.

பறவைகள் பிராணிகள் இவைகளுடைய நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டு அதையெல்லாம் அடிப்படையாக வைத்து தான் காலநிலையைக் கண்டுபிடிக்கின்ற கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

வாத்து சில சமயம் தன்னுடைய அலகை தன்னுடைய இறகுகளிலே புதைத்து இருக்கும். அப்படி செய்தால் குளிர்காலம் வரப்போகின்றது என்று அர்த்தம். பருவநிலை குளிராய் மாறப்போகின்றது என்பதற்கு இது தான் அறிகுறி.

சிட்டுக்குருவி புழுதியிலே விழுந்து புரளும். சிறகுகளை படபடவென்று அடிக்கும். அப்படி செய்தால் மழை வரப்போகின்றது என்று அர்த்தம். ஒன்று மட்டும் நாம் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கையின் சீற்றம் என்று சொல்லுகிறோம் அல்லவா? இயற்கை ஏன் நம்மேல் கோபப்படுகிறது? இயற்கையை நாம் அனுசரித்து போவதில்லை அதனால் கோபப்படுகின்றது.

காடுகளை அழிக்கக் கூடாது, விலங்குகளை கொல்லக் கூடாது, இயற்கையே ஏற்படுத்தி வைத்திருக்கின்ற சமநிலையைக் கெடுக்க கூடாது. அதைப்புரிந்து கொண்டு வாழ்ந்தோம் என்றால் பூமியும் நடுங்காது. நாங்களும் நடுங்க வேண்டியது இல்லை.

ஒருத்தர் இருந்தார். சாராயக் கடைக்குப் போனார். நிறைய சாப்பிட்டார் அப்புறம் சொன்னார். "இது ரொம்ப அற்புதமான சரக்கு போல இருக்கு. உள்ளே போனதும் உடனே இந்த பூமியே நடுங்கிற மாதிரி இருக்கின்றது எனக்கு" என்றார். இதற்கு கடைக்காரர் சொன்னார் "நீங்கள் சாப்பிட்டது வெறும் தண்ணி தான் இப்போது ஏற்பட்டிருக்கிறது பூமியதிர்ச்சி" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிழவர் கேட்ட கேள்வி



பாண்டிய நாட்டை ராசராசன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மனைவி ஓரளவிற்கு இசைஞானம் உடையவள் சிறந்த அழகியும் கூட.

தனக்கிருந்த கொஞ்சநஞ்ச இசை ஞானத்தை வைத்துக் கொண்டே மிகுந்த பெருமையடைந்தாள் அரசியார். தன்னை மிஞ்சிய இசை ஞானமுள்ளவர்கள் யாரும் இல்லை என்பது அவள் எண்ணம்.

அரசியைப் புகழ்ந்து அவளது சிறப்பை பாராட்டியே தங்கள் காரியங்களை சாதித்துக் கொண்டது காக்கா கூட்டம் ஒன்று.

வருடா வருடம் கோயிலில் விழா நடைபெறும். அப்பொழுதெல்லாம் பாணபத்திரர் என்ற இசைக்கலைஞர் மிகவும் அழகாக இசை நிகழ்ச்சி நடத்துவார். அவர் இறந்த பின், அவரது மனைவி இறைவனைப் புகழ்ந்து பாடுவாள்.

ராசராசன் பதவிக்கு வந்த பிறகு, அவனது மனைவியான அரசியாரின் இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

பாணபத்திரரின் மனைவி மிகுந்த வேதனையடைந்தாள். "சரி! நமக்கு விதித்தது இவ்ளோ தான்!" என சிலகாலம் ஒதுங்கி இருந்தாள்.


அந்த வருடமும் வழக்கம் போல் திருவிழா வந்தது. இறைவனை எப்படியாவது பாடித் துதிப்பது என்று முடிவு செய்தாள்.

வழக்கம் போல் அரசியாரின் இசைக் கச்சேரி கோலாகலமாக நடைபெற்றது. மக்கள் இசையை ரசித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று ஜனங்கள் மெல்ல எழுந்து செல்ல ஆரம்பித்தனர். அதைக் கண்டதும் மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன நடக்கிறது என்று பார்க்கச் சொன்னான்.

கோயிலில் ஒரு மூலையில் அமர்ந்து பாணபத்திரரின் மனைவி இறைவனைத் துதித்து பாடிக் கொண்டிருந்தாள். மக்கள் அவளது இசையில் மயங்கி அங்கே சென்றனர். இதைக் கேள்விப்பட்ட அரசியார் கொதித்துப் போனார். "அன்பே! என்னைக் கேவலப் படுத்த வேண்டும் என்பதற்காகவே இவள் இப்படி நடந்து கொண்டாள். இவளுக்கு சரியான தண்டனை கொடுங்கள்!" என்றாள். (தொடரும்)

# மகாபாரதம்




அரசன் எப்போதும் அமைச்சர்களுடன் செய்யும் ஆலோசனைகளைப் பிறர் அறியா வண்ணம் மறைவாகச் செய்ய வேண்டும்.

காலையில் அறத்திலும் மாலையில் பொருளிலும், முன்னிரவில் இன்பத்திலும், பின்னிரவில் தெய்வ சிந்தனையிலும்ஈடுபட வேண்டும்.

அரசன் நான்கு வருணத்தாரின் தர்மங்களையும் காக்க வேண்டும். எல்லோரையும் நம்பி விடக் கூடாது. நம்பத் தக்கவர்களை மட்டுமே நம்ப வேண்டும். அவர்களிடமும் அளவு கடந்த நம்பிக்கை கூடாது.

ஓதுவிக்காத ஆசிரியன், ஓதாத ரித்விக், பாதுகாவாத மன்னன், விருப்பம் இல்லாத வற்றைக் கூறும் மனைவி, கிராமத்திலேயே இருக்க விரும்பும் இடையன், காட்டிலேயே இருக்க விரும்பும் நாவிதன் ஆகிய இந்த அறுவரையும் கடலில் உ[illegible] கப்பலைப் போல[illegible] விட வேண்டும் என பிராசேதச மனு கூறியுள்ளார்.

நாட்டை நன்கு பாதுகாப்பதை விட மேலான ராஜ தர்மம் வேறேதும் இல்லை" எனக் கூறி [illegible] பீஷ்மர். [illegible] கேட்டுக் கொண்டிருந்த வியாசர், கண்ணன், சாத்யகி ஆகியோர் மகிழ்ந்தனர்.

தருமர் கண்களில் கண்ணீருடன் பீஷ்மரை வணங்கி "மேலும் ஐயங்களை நாளை கேட்பேன்" என்று விடை பெற்றார். பின்னர் அனைவரும் அஸ்தினாபுரம் அடைந்தனர்

**அரசன் என்பது எப்படித் தோன்றியது**

மறுநாள் காலையில் பாண்டவர்களும் பிறரும் குருஷேத்திரம் சென்று பீஷ்மரை வணங்கி அருகில் அமர்ந்தனர்.

தருமர் பீஷ்மரை "அரசன் தோன்றிய வரலாற்றை விளக்கும்படிக் கேட்டார். "இன்பம் துன்பம், பசி தாகம், பிறப்பு இறப்பு முதலியவை மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானவை.

அப்படி இருக்கையில் எப்படி ஒருவன் மட்டும் அவர்களுக்குத் தலைவனாக இருக்கக் கூடும்? அறிவு ஜீவிகள் பலர் இருக்க அது எப்படி ஒருவன் மட்டும் ஆளத்தக்கவன் ஆவான்? இதற்கான காரணம் சாதாரணமாய் இராது. ஆகவே அது பற்றி விளக்க வேண்டும்" என்றார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.
- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையில் உள்ள இந்து அமைப்புகள் இந்தியாவுடன் பேச வேண்டும்

இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்குச் சொந்தமானது என்ற முடிவில் இருந்து பௌத்த பீடங்களோ அன்றி சிங்களப் பேரின வாதிகளோ விலகப்போவது இல்லை.

மாறாக அவர்கள்; இலங்கை பௌத்த சிங்களவர்களுக்கு உரிய நாடு என உரிமை கோருவதிலேயே உறுதியாக இருக்கின்றனர்.

மேற்போந்த கருத்து நிலை இருக்கும்வரையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்பட மாட்டாது என்பதை அடித்துக் கூறமுடியும்.

அதேநேரம் இனப் பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொள்வதில் தமிழ் அரசியல் தரப்புகளிடம் எந்த வழிவாய்க்கால்களும் இல்லை என்பதும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுவதைத் தவிர, தமிழ் அரசியல் தரப்பால் எதுவும் செய்ய முடியவில்லை.

நல்லாட்சியுடன் இணைந்து அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை கொண்டுவருகின்ற முயற்சி எடுக்கப்பட்டதாயினும் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஓரம்கட்டிவிட்டு அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நெருக்கம்கொள்ள அதனால் கோபம் அடைந்த மைத்திரிபால சிறிசேன செய்த அரசியல் கூத்துக்கள் என்ன என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையிராது.

ஆக, நல்லாட்சியில் மைத்திரிபால சிறிசேனவுடனும் ரணில் விக்கிரமசிங்கவுடனும் சமாந்திரமான உறவைப் பேணாமல் ஒரு பக்கம் சாய்ந்தமையால், கிடைத்த சந்தர்ப்பத்தையும் தமிழ்த் தரப்பு இழந்துபோனது.

இதைத் தவிர, தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்படுவதும் ஒருபோதும் சாத்தியப்படப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இடையிடையே தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படத் தயார் எனச் செய்திகள் வெளிவந்தாலும் அதில் எந்த உண்மையும் இல்லை.

மாறாக, தேர்தல் அரசியலை மையப்படுத்தியதான தமிழ் அரசியல் தரப்புகளின் அரசியல் நகர்வுகளுக்குள் தமிழ் மக்களின் உரிமை என்ற விடயம் வெறும் அலங்கார வளைவு மட்டுமேயன்றி வேறெதுவும் இல்லை.

இவ்வாறானதொரு நிலையில் இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் எந்த முயற்சிகளும் தற்போது இடம்பெறவில்லை என்பது தான் உண்மை.

இவ்வாறு எந்த முயற்சியும் இல்லாத ஒரு சூழ்நிலையை சமகால கொரோனாத் தொற்று நியாயப்படுத்துவதாக இருக்கையில், தமிழ் மக்களின் உரிமைசார் விவகாரம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இதேநிலைமை நீடிக்குமாயின், தமிழ் இனத்தின் எதிர்காலம் மோசமாக அமையும் என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

எனவே இப்போது நாம் செய்ய வேண்டிய அவசர நடவடிக்கை இந்திய மத்திய அரசுடன் தொடர்பை ஏற்படுத்துவதுதான்.

அதிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் சந்திப்புகளை ஏற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இது விடயத்தில் இலங்கையில் உள்ள இந்து அமைப்புகள் ஒன்றுபட்டு ஒரு பலமான அமைப்பாகிக் கொண்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து நிலைமைகளை எடுத்துக்கூறும்போது அது மிகப்பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்பலாம்.

## கோவிட் நிதியத்திற்கு சம்பளத்தை அளித்தால் உயிர் வாழமுடியாது

### ஆளும் கட்சி எம்.பி டிலான் பெரேரா

(கொழும்பு)

கோவிட் நிதியத்திற்கு முழுச் சம்பளத்தையும் வழங்குவதற்கு ஆளும் கட்சியின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடந்த ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"இன்று அரசியல்வாதிகள் பலரும் சம்பளத்தை கோவிட் நிதியத்திற்காக அன்பளிப்புச் செய்கின்றனர். எனக்கு சம்பளத்தை முழுவதும் அளிக்க முடியாது. அவ்வாறு முழு சம்பளத்தையும் அளித்தால் என்னால் உயிர் வாழமுடியாதென்பதால் அரைச் சம்பளத்தை அன்பளிப்புச் செய்கின்றேன்.

எனது தந்தையார் நிதி நிறுவனத்தில் முதலிட்டதால் நட்டமடைந்தார். அதனால் முழுச் சம்பளத்தையும் நிதியத்திற்கு அளித்துவிட்டால் நான் பொருளாதாரப் பக்கத்தில் சிரமத்தை எதிர்கொண்டு விடுவேன்" என அவர் தெரிவித்தார்.

இதேவேளை சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சரான பியல் நிஸாந்தவும் கோவிட் நிதியத்துக்கு தனது சம்பளத்தை வழங்கமுடியாதென தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழில் 18,076 குடும்பங்களுக்கு இதுவரை இடர்கால நிதிக்கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 36 ஆயிரம் குடும்பங்கள் இடர்கால நிதிக். கொடுப்பனவு பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்றுவரை யாழ். மாவட்டத்தில் 18, 076 குடும்பங்களுக்கு இடர்கால நிதிக் கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பொதுமுடக்க நிலையில் யாழ்.மாவட்டத்தில் அரசின் இரண்டாயிரம் ரூபாய் இடர்கால நிதி வழங்கும் வேலைத்திட்டம் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நேற்றைய தினம் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் அந்தந்தப் பிரதேச செயலர்களின் வழிநடத்தலின் கீழ் 15, 543 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ச்சியாக இக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-18.33)

## 30 வயதிற்கு மேற்பட்டோரில் 51 வீதமானோருக்கு இரு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கையில் 30 வயதிற்கு மேற்பட்டோரில் 51 வீதமானோருக்கு இரண்டு கொரோனா தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த நிலையில், 60 வயதிற்கு மேற்பட்டோர் விரைவில் தங்களுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் கூறினார். (ம)

## மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சிறுவர்கள் 7 பேர் உட்பட 27 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சிறுவர்கள் எழுவர் உட்பட 27 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின்போது குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இருந்து 33 பேரின் மாதிரிகள் இவ்வாறு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையிலேயே 27 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் சிறுவர்கள் ஏழு பேர் உள்ளடங்கியுள்ளனர்.

8, 9, 14, 14 வயது சிறுவன்களும் 13, 16, 16 வயது சிறுமியர்களும் என ஏழு சிறுவர்கள் உள்ளிட்ட 27 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சத்திய தரிசனம்



### பிரமாண்ட லிங்கம்

- ஆனந்த ஸ்வரூபனைத் தியானிப்பதால் உனக்குள் பொங்கியெழும் தெய்வீக ஆனந்தம் எல்லாத் துன்பங்களையும் கவலைகளையும் விரட்டிவிடும்.
- திரிபுர அசுரர்களை வதைக்கப் புறப்பட்ட சிவன் தனக்குக் கொடுக்கப்பட்ட ரதத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டுச் சிரித்தாராம். திரிபுர அசுரர்கள் என்பவை மூன்று உடல்களான ஸ்தூலம் சூட்சுமம்.
- காரணம் அவருக்குச் சாரதி யோக நித்திரையில் பெரும்பாலும் ஆழ்ந்திருக்கும் விஷ்ணு; ரதமோ நிலைத்திருக்கும் பூமி; அதன் இரண்டு சக்கரங்கள் சூரிய சந்திரர்கள். அவர்கள் எப்போதும் இணக்கமாக ஓடுவதில்லை. அவர் சிரித்த சிரிப்பே அசுரர்களை வீழ்த்தப் போதுமானதாக இருந்தது.
- அதற்கு மேல் போர்புரியத் தேவையே இருக்கவில்லை. மூன்று உடல்களிலும் இருந்த தீயசக்திகள் எப்படி இறந்தன? எங்கே தெய்வீக ஆனந்தம் இருந்ததோ அங்கே தீய சக்திகளால் இருக்க முடியவில்லை.
- காரணம் அவை துக்கத்தில் விளைந்தவை. ஆனந்தத்தை வளர்த்துக்கொள், தீய வாசனைகளும் இயல்புகளும் மறைந்துவிடும். ஏனென்றால் அவற்றுக்கு இதயத்தில் காலூன்ற இடம் கிடைக்காது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2021-16.09.2021



நட்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் கும்ப இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக் கிறார். ஏழரைச் சனியில் இப்பொழுது விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் சனி வக்கிர இயக்கத்திலும் இருக்கிறார். விரயாதிபதி வக்கிரம் பெறுவதாலும், தன லாபாதிபதியான குரு இராசியில் சஞ்சரிப்பதாலும் இம்மாதம் தனவரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும்.

உங்கள் இராசிநாதன் சனி, ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் இருந்தாலும் கூட மாற்றங்களின் மூலம் ஏற்றங்களையே வரவழைத்துக் கொடுப்பார். இருப்பினும் ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகளும், வாகனத்தால் தொல்லைகளும் ஏற்படலாம். கவனம் தேவை. உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், குரு. அவர் வக்கிரம் பெற்றிருப்பதால், பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படாது. தனாதிபதி வக்கிரம் பெறும் பொழுது சுபவிரயங்கள் அதிகரிக்கும். இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நடை பெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

### உச்ச புதன் சஞ்சாரம்

ஒகஸ்ட் 23 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம -அஷ்டமாதிபதியான புதன் உச்சம் பெறும்போது, பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி ஒரு தொகையை செல விடுவீர்கள். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் இருந்த பிரச்சினைகள் அகலும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளுக்கு கொடுத்து உதவுவீர்கள்.

### சொந்த வீட்டில் சுக்கிரன்

## தனவரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும்

செப்டெம்பர் 6ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அங்ஙனம் பலம்பெறும் சுக்கி ரன் மீது குருவின் பார்வையும் பதிகி றது. எனவே இக்காலம் ஓர் பொற்கால மாக அமையும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பாக்கிய ஸ்தானம் பலம் பெறுவதால் கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும்.




### கன்னி-செவ்வாய் சஞ்சாரம்

செப்டெம்பர் 7 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் கவனம் தேவை. நினைத்தது நிறைவேறாமல் போகலாம். நீடித்த நோய் மீண்டும் தலைதூக்கும். உடன் பிறப்புகளுக்குள் பிரச்சினைகள் அதிகரிக்கும். சொத்து தகராறுகள் மற்றும் சொந்தங்களின் பகை அதிகரிக்கும். எலும்பு, நரம்பு சம்பந் தப்பட்ட பாதிப்புகள் உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எதையும் முன் கூட்டியே யோசித்துச் செய்ய வேண்டிய நேரம் இது.

### குருவின் வக்கிர இயக்கம்

மாதத் தொடக்கத்தில் குரு, கும்ப இராசியில் வக்கிரம் பெற்றிருக்கிறார். அவர் செப்டெம்பர் 14 ஆம் திகதி மகர இராசிக்கு வருகிறார். அங்கும் வக்கிர இயக்கத்தி லேயே இருக்கிறார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு நீச்சம் பெறுவதால், பொருளா தாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். புது முயற்சிகளில் கவனம் செலுத்த இயலாது. கொடுக்கல்-வாங்கல் ஸ்தம்பித்து நிற்கும். இம்மாதம் பைரவர் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் எதையும் நிதானித்துச் செய்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



உள்ளத்தில் தோன்றியதை ஒளிவு மறைவின்றி சொல்லும் மீன இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். எனவே விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் எதிர்பார்த்தபடி அமையும். உத்தியோகத்தில் பதவி உயர்வு வரலாம்.

உங்கள் இராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சனி பகவான். அவர் வக்கிரம் பெற்றிருப்பதால், வருமானம் எவ்வளவு வந்தாலும் செலவாகி விடும். எனவே சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். சனியால் பாதகங் கள் ஏற்படாமலிருக்க சனிக்கிழமை தோறும்சனிபகவான் வழிபாட்டையும், அனுமன் வழிபாட்டையும் செய்யுங்கள். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கிறார். அதற்காக கவலைப்பட வேண்டாம். 10ஆம் இடத்திற்கும் அவர் அதிபதியாக விளங்குவதால் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் அடைவது நன்மைதான்.

எனவே தொழில் மற்றும் உத்தியோ கத்தில் வெற்றி காண்பீர்கள். நல்ல காரியம் நடைபெற வழிபிறக்கும். குருவின் பார்வை செவ்வாயின் மீது பதிவதால் 'குரு மங்கள யோகம்' ஏற்படுகிறது. எனவே இல்லத்தில் மங்கள ஓசை கேட்கும் அமைப்பு உண்டு.

### உச்ச புதன் சஞ்சாரம்

ஒகஸ்ட் 23 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு

## உத்தியோகத்தில் பதவி உயர்வு வரலாம்

அவர் உச்சம் பெறுகிறார். களத்திர ஸ்தானத்தில் புதன் உச்சம் பெறும் போது, கல்யாண முயற்சிகள் கைகூடும். கல்வி சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டில் பணிபுரிய அழைப்புகள் வரலாம். கூட்டுக் குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் அகலும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர்.

### சொந்த வீட்டில் சுக்கிரன்

செப்டெம்பர் 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அங்ஙனம் பலம்பெறும் சுக்கிரன் மீது குருவின் பார்வையும் பதிகிறது. இக்காலத்தில் அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் சூழ்நிலை உருவாகும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.




### கன்னி-செவ்வாய் சஞ்சாரம்

செப்டெம்பர் 7 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இக் காலம் ஒரு இனிய காலமாக அமையும். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். தனாதிபதியாக விளங்கும் செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத் துணையின் உத்தியோகம் சம்பந்தமாக செய்த முயற்சிக்கு பலன் கிட்டும்.

### குருவின் வக்கிர இயக்கம்

மாதத் தொடக்கத்தில் குரு, கும்ப இராசியில் வக்கிரம் பெற்றிருக்கிறார். அவர் செப்டெம்பர் 14 ஆம் திகதி மகர இராசிக்கு வருகிறார். அங்கும் வக்கிர இயக்கத்திலேயே இருக்கிறார்.

மேலும் மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். இராசிநாதன் வலிமையிழப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. இம் மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விநாயகரை வணங்குங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். வீட்டுப் பிரச்சினை ஏற்படத்தான் செய்யும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். வெளிநாட்டில் இருந்தும் வேலைவாய்ப்பிற்கான அழைப்புகள் வரலாம். சுபச்செய்திகள் உண்டு. குருவின் வக்ர காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. பணிபுரியும் பெண்களுக்கு எதிர் பார்த்த மாற்றங்கள் வரலாம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ப்பவதியின்...

தொற்று காரணமாக கம்பளை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த கர்ப்ப வதிப் பெண்ணின் வயிற்றில் இருந்த ஐந்து மாத சிசு கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளது.

கம்பளை வைத்தியசாலையின் சுகாதார பிரிவு இதனை அறிவித்துள்ளது.

கம்பளையைச் சேர்ந்த குறித்த பெண், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு, கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இதன்போது, கர்ப்பவதிப் பெண்ணின் வயிற்றில் இருந்த சிசு உயிரிழந்துள்ளது.

இதன் காரணமாக சத்திரசிகிச்சை மூலம் சிசு அகற்றப்பட்டதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். (ம)

## தென்மராட்சியில்...

களில் 4 கொரோனா மரணங்கள் பதிவானதாக சுகாதாரப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றது.

இதன்படி நேற்றைய தினம் சாவகச்சேரி நகரில் நகைக்கடை நடத்தும் 45 வயதான ஒருவர் கொரோனாத் தொற்றினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 24 மணித்தியாலங்களில் தென்மராட்சியில் 4 மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதாரப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## ஊரடங்கை நீடிப்...

வர்த்தன கூறியுள்ளார்.

நாட்டில் கொரோனாப் பரவல் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பை தொடர்ந்து 10 நாள் ஊரடங்கு தற்போது அமுலில் உள்ள நிலையில், தொடர்ந்தும் தொற்றாளர் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை உயர்ந்தே வருகின்றது.

இந்நிலையில் 30ஆம் திகதிக்கு பின்னரும் ஊரடங்கை நீடிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கப்போவதாக கூறப்படுகின்றது. (ம)

## 8 ஆயிரத்தை...

றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 7,948 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## +4,483...

பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 407,768 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் 2,163 பேர் கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறினர்.

அதற்கமைய, இதுவரை நாட்டில் கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 348,930 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## கம்பியால்...

தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தங்கேணி கலைவாணி வீதிப் பகுதியில் காணித் தகராறு காரணமாக இரு குடும்பத்தினரிடையே நேற்றுப் புதன்கிழமை ஏற்பட்ட கைகலப்பில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் அவரது மகள் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தற்போது நாடளாவியரீதியில் அமுலிலுள்ள நிலையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வெளிநாட்டில் உள்ளவரின் வயல் காணியை சகோதரர்கள் இருவர் பராமரித்து வருகின்றனர்.

நேற்றைய தினம் அந்தக் காணியில் நின்றிருந்த மேற்படி குடும்பஸ்தருடன் அயல்வீட்டைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் சென்று முரண்பட்டுள்ளனர்.

முரண்பாடு கைகலப்பாக மாறிய நிலையில் கம்பியால் தாக்கப்பட்டு இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

குறித்த சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட இளம் குடும்பஸ்தரின் மகள் படுகாயமடைந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு சங்கானை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மகள் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இராசநாயகம் ரெஜியானந்தன் (வயது-49) என்பவரே உயிரிழந்தவராவார்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-17,18,33,104)

## கைதானவர்...

பட்டுள்ளவர்கள் குறித்து கண்டறிதல், விடுதலை செய்தல், பிணை வழங்குதல் உள்ளிட்ட எதிர்காலத் தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆலோசனை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஜனாதிபதியின் சட்டத்துறைப் பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதி சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹனதீர தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 13 ஆவது பிரிவுக்கு ஏற்ப இந்த ஆலோசனை சபையை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான இந்த ஆலோசனை சபையின் ஏனைய உறுப்பினர்களாக, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர். ஹெய்யந்துடுவ மற்றும் ஓய்வுபெற்ற சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக சிறைத் தண்டனையை அனுபவிக்கும் மற்றும் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் குறித்து கண்டறிதல், விடுதலை செய்தல், பிணை வழங்குதல் உள்ளிட்ட எதிர்காலத் தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு பரிந்துரைகள் மற்றும் ஆலோசனை வழங்குதல் என்பன இச்சபையின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

"நீண்டகாலமாக ஆலோசனை சபை நியமிக்கப்படாத காரணத்தால், இதுவரையில் சிறையில் உள்ளவர்களுக்கு தங்கள் உரிமைகள் தொடர்பிலான விடயங்களை முன்வைக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்த ஆலோசனை சபை நியமிக்கப்பட்டதன் மூலம், கைதிகள் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க சந்தர்ப்பம் கிடைக்கும் என்றார். (ம-3)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் தடுப்பூசி பெறுவது அவசியம்

(கொழும்பு)

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கோவிட் தொற்றுக்குள்ளாகும் பட்சத்தில் அவர்கள் அபாய நிலைமையை அடையக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும்.

எனவே புற்றுநோயாளர்கள் கோவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமானதாகும் என்று புற்றுநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் சச்சினி ரத்நாயக்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கோவிட் தொற்றுக்கு உள்ளாகும் பட்சத்தில் அவர்கள் அபாய நிலைமையைக் அடையக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும். புற்றுநோயால் பாதிக்கப்பட்டமையால் நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாகக் காணப்படுபவர்களுக்கு மீண்டுமொரு நோய் நிலைமை ஏற்படும்போது அதனை எதிர்த்துப் போராடுவது கடினமாகும். எனவே புற்றுநோயாளர்கள் தமது புற்றுநோய்க்கான மருந்துகளை தொடர்ச்சியாக எடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

அத்தோடு இவ்வாறானவர்கள் கோவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார். (ம)

## பேராபத்தில்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொத்தமாக 10,725 நபர்களுக்கு இற்றைவரை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலத்தைவிட தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

நேற்றைய கணக்கெடுப்பின்படி 213 நபர்கள் இதுவரை இறப்புக்குள்ளாகியுள்ளார்கள். மேலும் 3,686 குடும்பங்களைச் சேர்ந்த 10,548 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே, யாழ்.மாவட்டத்தில் பொதுமக்கள் இறுக்கமாக சுகாதார கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல் மற்றும் கோவிட் செயலணியின் வழிகாட்டலுக்கு அமைய பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுவதுடன் மிக அவசிய தேவைகளுக்கு மட்டுமே பொது மக்கள் வீட்டிலிருந்து வெளியே வரவேண்டும்.

அதேவேளை சுகாதார நடைமுறைகளான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், தேவையற்ற நடமாட்டம், ஒன்றுகூடல்களைத் தவிர்க்க வேண்டும்.

எனவே இந்த நடைமுறைகளைப் பின்பற்றி எம்மையும் குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும், யாழ்.மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும், அதேவேளை எழுந்து நடமாட முடியாத வயோதிபர்களுக்கு வீடுவீடாகச் சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளை சுகாதார தரப்பினர், கிராம சேவையாளர் மற்றும் இராணுவத்தினரும் கைகோர்த்து தடுப்பூசி நடவடிக்கைகளுக்கு உதவ முன்வந்துள்ளார்கள்.

தடுப்பூசிகளை விரைந்து பெற்றுக்கொள்வது எமது பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கானது. இது இறப்புக்களை தவிர்க்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

ஆகவே பொதுமக்கள் அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி தங்களையும் சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் தடுப்பூசியினைப் பெற்று தத்தமது பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வது அவசியமென மேலும் தெரிவித்தார். (ம-18,33)

## சீனியின் விலை...

நாட்டில் நேற்று சீனி கிலோ ஒன்றின் விலை 210 ரூபாய்வரை திடீரென அதிகரித்துள்ளது.

கடந்த வாரத்தில் சீனியின் விலை 160 ரூபாயாக காணப்பட்டது. எனினும் திடீரென 50 ரூபாயினால் விலை உயர்ந்துள்ளது.

எனினும் இவ்வாறு சீனி விலையின் திடீர் உயர்வுக்கு தம்மால் ஒன்றும் செய்ய இயலாது என்று பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தெரிவித்துள்ளார். (ம)

## நாட்டில் தேசிய...

கொண்டு சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்ற வேண்டும்.

சுகாதார ஆலோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கினால் கோவிட் தாக்கத்தை சிறந்த முறையில் வெற்றி கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம)

## கொரோனாத்...

யாழ்ப்பாணம் மருதடி லேனைச் சேர்ந்த 75 வயதுடைய பெண் ஒருவரும் சங்கானையைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண் ஒருவரும் சாவகச்சேரியைச் சேர்ந்த 46 வயதுடைய வர்த்தகர் ஒருவரும் சுன்னாகத்தைச் சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவரும் கொக்குவிலைச் சேர்ந்த 82 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்தனர். (ம-18,30,33)

## கொரோனா...

மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

மேலும் கணுக்கேணி கிழக்கினைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரும் ஒட்டுசுட்டான் பெரியசாளம்பன் பகுதியினைச் சேர்ந்த 68 வயதுடைய வயோதிபர் மற்றும் முள்ளியவளை கிச்சிராபுரம் பகுதியினைச் சேர்ந்த 42 வயதுடைய பெண் ஒருவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். (ம-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட சடலம் கைமாறியதால் குழப்பம்

(முறிகண்டி)

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் கொரோனாத்தொற்றினால் இறந்தவர் ஒருவரின் சடலத்திற்குப் பதிலாக வேறு ஒருவரின் (திருமுறிகண்டி பகுதியைச் சேர்ந்தவர்) சடலத்தினை மாற்றிக்கொடுத்து அந்த சடலம் வவுனியா கொண்டு சென்று எரியூட்டப்பட்ட நிலையில் திருமுறிகண்டியில் இருந்து சடலத்தினை பெற வந்த உறவினர்கள் சஞ்சலத்திற்கு உள்ளாகியுள்ளார்கள்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 22.08.21 அன்று முல்லைத்தீவு திருமுறிகண்டி பகுதியில் உயிரிழந்த 74 வயதுடைய முதியவரான குமாரன் கோபாலன் என்பவரின் சடலத்தினை பிரேத பரிசோதனைக்காகவும் பி.சி.ஆர் பரிசோதனைக்காகவும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மாங்குளம் பொலிஸாரின் உதவியுடன் கொண்டுவந்து ஒப்படைத்துள்ளார்கள்.

முறிகண்டியினைச் சேர்ந்த உயிரிழந்தவருக்கு கொரோனா இல்லை என்ற பெறுபேறு நேற்று முன்தினம் இரவே கிடைத்துள்ளது.

இதற்கமைய மரண விசாரணை அதிகாரியின் அனுமதியுடன் நேற்றுக் காலை சடலத்தினை கொண்டு செல்வதற்காக மாவட்ட மருத்துவமனையின் பிரேத அறைக்குச் சென்றபோது அங்கு உயிரிழந்தவரின் சடலம் காணப்படாத நிலையில் உறவினர்கள் சஞ்சலமடைந்துள்ளார்கள்.

கடந்த 23.08.21 அன்று முல்லைத்தீவு நாயாற்று பகுதியில் பருவகால தொழில் நடவடிக்கைக்காக வந்த புத்தளத்தினைச் சேர்ந்த 65 வயதுடைய நபர் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் கொரோனா தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலத்திற்கு பதிலாக முறிகண்டி பகுதியினை சேர்ந்த 74 வயதுடையவரின் சடலத்தினை உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளதால் அவரின் சடலத்தினை எரிப்பதற்காக நேற்று முன்தினம் வவுனியாவிற்கு மருத்துவமனை நிர்வாகம் அனுப்பியுள்ளனர். அங்கு சடலம் எரிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றில் உயிரிழந்த நாயாற்றினைச் சேர்ந்த புத்தளம் வாசியின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை பிரேத அறையில் காணப்படும் நிலையில் அவரின் உறவினர்களால் முறிகண்டியினைச் சேர்ந்த இறந்தவரின் சடலத்தினை வவுனியா கொண்டு சென்று மின்தகன மேடையில் எரியூட்டப்பட்டதால் முறிகண்டியினைச் சேர்ந்த இறந்தவரின் உறவினர்கள் சஞ்சலத்திற்கு உள்ளாகியுள்ளார்கள்.

சம்பவம் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை நிர்வாகத்திடமும் பொலிஸாரிடமும் தெரியப்படுத்தியுள்ளதுடன் எரித்த சடலினை மீண்டும் கொண்டுவர முடியாத நிலையில் இருதரப்பினரும் இணக்கப்பாட்டுக்கான பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. (ம-100.281)

# ஓட்டமாவடியில் மேலும் 38 கொரோனா சடலங்கள் அடக்கம்

(மட்டக்களப்பு)

ஓட்டமாவடியில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களின் மேலும் 38 கோவிட் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழக்கும் சடலங்கள் கிழக்கு மாகாணம் ஓட்டமாவடியிலுள்ள சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் 38 கோவிட்-19 சடலங்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் - 34, பௌத்தர்கள் - 02, இந்து - ஒருவர், கிறிஸ்தவர் - ஒருவர் என இவ்வாறு 38 கோவிட்-19 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதையடுத்து இதுவரை அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள கோவிட்-19 சடலங்களின் எண்ணிக்கை 2,113 ஆக அதிகரித்துள்ளது.

முஸ்லிம்கள் - 1,939 பேரின் சடலங்கள், இந்துக்கள் - 86 பேரின் சடலங்கள், பௌத்தர்கள் - 52 பேரின் சடலங்கள், கிறிஸ்தவர்கள் - 36 பேரின் சடலங்கள் என தேசிய ரீதியில் மரணித்தவர்களின் 2,113 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வடக்கில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 27.18 வீதமானோருக்கு இரு தடுப்பூசிகளும் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் 30 வயதுக்கு மேற் பட்டவர்களில் 27.18 வீதம் பேர் இதுவரை முழுமையாகத் தடுப்பூசி பெற்றுள்ளதாகவும், 83 வீதமானவர்கள் குறைந்தது ஒற்றைத் தடுப் பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் மாகாணத் தடுப்பூசித் தரவுகள் தெரிவிக்கின்றன.

வடமாகாணத்தில் தடுப்பூசி பெற்றுக் கொள்ளத் தகுதியான 30 வயதுக்கு மேற்பட்ட 657,547 பேரில் இதுவரை 544,943 பேர் குறைந்தது ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். அத்துடன் 178, 690 பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் 285,775 பேர் (83%) பேர் ஒரு தடுப்பூசியையும், 104,504 பேர் இரண்டு தடுப்பூ சிகளையும் பெற்றுக் கொண்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-18.33)

# 15 வயது சிறுமியொருவர் புத்தளத்தில் திடீர் மரணம்

## பரிசோதனையில் கொரோனா உறுதி

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் 15 வயது சிறுமியொருவர் திடீரென உயிரிழந்த நிலையில் சிறுமிக்கு கோவிட் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

புத்தளம், மணல்குன்று பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கோவிட் தொற்றுக்கு இலக்கான குறித்த சிறுமி, கோவிட் சிகிச்சை நிலையத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில், குணமடைந்து வீடு திரும்பிய பின்னரே இரு நாட்களுக்கு முன் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, உயிரிழந்த சிறுமியின் சடலம் புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, அச்சிறுமிக்கு கோவிட் தொற்று இருப்பது இரண்டாவது முறையாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிறுமியின் சடலம் புத்தளத்திலிருந்து குருநாகலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து நல்லடக்கத்திற்காக ஓட்டமாவடிக்கு கொண்டு செல்வதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொண்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ம)


மணிவிழா வாழ்த்துகள்



திருமதி

கலாரஜனி விஷ்வநாதன்

திறம்படப் பணியாற்றி நிறைந்த பெறுபேறெடுத்தோய் சிறப்புற வாழிநீடு
குறைந்தபேச்சு சிறந்தசேவை முறையான நுட்பமுடன் கற்பித்தல்
சாந்த சொரூபமாய் சாதனைச் சிகரமாய் திகழ்ந்தீர் நன்றே
பார்வையாலே மாணவரை வழிப்படுத்த
தேர்வினிலே உயர்பெறுபேறு பெற்றார்
கணிதத்தில் ஏணியாகி கல்வியாளர் நற்பாராட்டை சுவீகரித்தீர்
வரமெனவே அருஞ்சேவை தாமுடனே பிரதிபலிப்பாய் பிரகாசித்தீர்
மங்களம் நிறையின்பம் நீண்ட ஆயுளுடன்
நிறைகுடமே வாழ மணிவிழா நல்வாழ்த்துகள்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை


# ஈஸ்டர் தாக்குதலில் சஹ்ரான் கும்பல் பயங்கரவாத அமைப்பின் ஒரு பகுதியே

## பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுதின தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட்ட பயங்கரவாதி சஹ்ரான் உள்ளிட்ட கும்பலானது, மொத்த பயங்கரவாத வலையமைப்பின் ஒரு சிறு பகுதி மட்டுமே என்பது விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன தெரிவித்தார்.

அத்துடன் மிக சூட்சுமமாக குறித்த பயங்கரவாத வலையமைப்பு 2 ஆம் நிலை குழுவொன்றினை தயார்ப்படுத்தி, சிறுவர்களுக்கு தமது சிந்தனைகளை விதைத்துள்ளமையும் அவ் விசாரணைகளின் ஊடாக தெரியவந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுவரையிலான விசாரணைகளில் 723 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 311 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் அல்லது தடுப்புக் காவலின்கீழ் உள்ளனர்.

பல வங்கிக் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டுள்ளதுடன் சொத்துக்கள் பணம், அசையும் அசையா சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டு, 168 மில்லியன் சொத்துக்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. ஒரு இலட்சம் தொலைபேசி அழைப்புக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 11 குற்றப் பத்திரிகைகள், 46 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சுமார் 100 இற்கும் அதிகமான சம்பவங்கள் குறித்த விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்டு ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றார். (ம)

# வாள்வெட்டில் மரணமான இளைஞனுக்கு மீண்டும் பிசிஆர்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் இடம்பெற்ற வாள்வெட்டில் மரணமடைந்த இளைஞனுக்கு மீண்டும் பிசிஆர் பரிசோதனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குருநகரில் சில தினங்களுக்கு முன்னர் வன்முறைக் குழு ஒன்றினால் சரமாரியான வாள்வெட்டுக்கு இலக்காகி சிகிச்சை பலனின்றி உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என யாழ். போதனா வைத்தியசாலை தெரிவித்திருந்தது.

இவ் அறிவிப்பினால் குழப்பமடைந்த உயிரிழந்த இளைஞரின் உறவினர்கள், நண்பர்கள் வைத்தியசாலையில் உடலைத் தம்மிடம் தருமாறு குழப்பம் விளைவித்திருந்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், இது தொடர்பில் யாழ். நீதவான் பீற்றர் போலின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

இதையடுத்து உயிரிழந்த இளைஞனுக்கு மீண்டும் பிசிஆர் பரிசோதனை செய்யுமாறும் அதன் அறிக்கையை யாழ். நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டிருந்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.